இதழ் 326
15 பெப்ரவரி 2025
18 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

youtube.com/@IlakkuWeb2.0
facebook.com/ilakku.ilakku.10
twitter.com/Ilakku1






# மட்டக்களப்பில் மேய்ச்சல் தரை அபகரிப்பு

## சிங்களப்பிரதிநிதிகளை உருவாக்கும் சதி.!

பா.அரியநேத்திரன்



# மக்களின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த ஊடகப்போராளி

வேல்ஸில் இருந்து **அருள்**



© 2025 இலக்கு இணையம்

# முள்ளிவாய்க்கால் நினைவுமுற்ற வளாகத்தில் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்த முன்னாள் போராளி!



முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற வளாகத்தில் முன்னாள் போராளி ஒருவர் பத்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து நீதி கிடைக்கும் வரை, சாகும் வரையான உண்ணாவிரத போராட்டத்தை நேற்று (14) காலை ஆரம்பித்துள்ளார்.

ஒரு காலினை இழந்த முன்னாள் போராளி அழகரெத்தினம் வனகுலராசா இன்றைய தினம் காலை 7 மணிக்கு முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற வளாகத்தில் நீர், உணவு உட்கொள்ளாமல், நீதி கிடைக்கும் வரை உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

அவர் 10 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, இலங்கை மட்டுமன்றி உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஆரம்பித்துள்ளார்.

அவர் முன்வைக்கும் கோரிக்கைகளாவன:

**1. தமிழர்களுக்கு தனி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.**

**2.வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உடனடி தீர்வு வழங்கப்பட வேண்டும்.**

**3. மாவீரர் துயிலும் இல்லங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.**

**4. தமிழினத் துரோகிகள் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும்.**

**5. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.**

**6. பிரதேசவாதம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்.**

**7. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இல்லாதவர்கள் இருந்ததாகக் கூறி, வெளிநாடு மற்றும் உள்நாட்டில் சக போராளிகளை காரணம் காட்டி, பணம் வசூலித்து, போராளிகளை ஏமாற்றி, சுற்றுலா விடுதி, தோட்டம், பண்ணை அமைத்து வேலை செய்யும் பணியாளர்களுக்கு சரியான சம்பளம் வழங்காமல் இருப்பதை நிறுத்தி, அவர்களுக்கு ஒரு மணி நேரத்துக்கு 200 ரூபா அடிப்படை சம்பளம் வழங்கப்பட வேண்டும்.**

**8. முதியோர் மற்றும் இளையோர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.**

**9. காணி மற்றும் வீடு இல்லாதவர்களுக்கு காணி, வீடு வழங்கப்பட வேண்டும்.**

**10. இலங்கையில் பிச்சை எடுப்பவர்களின் வீதம் அதிகரித்துள்ளதால், பிச்சை எடுப்பவர்கள் இல்லாத நிலை உருவாக்கப்பட வேண்டும்.**

இந்த 10 கோரிக்கைகளை முன்வைத்தே இந்த போராளி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

# அநுர அரசாங்கத்தின் கன்னி வரவு – செலவுத் திட்டம் – திங்கட்கிழமை தாக்கல்



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் கன்னி வரவு – செலவுத் திட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை (17.02.2025) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவே வரவு – செலவுத் திட்டத்தை தாக்கல் செய்ய உள்ளார்.

பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களித்து வெற்றிபெற வைத்துள்ளமையால் இந்த வரவு – செலவுத் திட்டத்தில் மக்களுக்கு கிடைக்கப்போகும் சலுகைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான அரசின் திட்டங்கள் குறித்து பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளன.

# தொடர்ந்து விழும் அமெரிக்க விமானங்கள்



அமெரிக்காவின் ஈ.ஏ-18ஜி (EA-18G Growler electronic warfare jet) கடற்படையின் தாக்குதல் விமானம் ஒன்று சன்டியாகோவளை குடாப்பகுதியில் கடந்த புதன் கிழமை(12) வீழ்ந்து அழிந்துள்ளது. விமானம் வீழ்வதற்கு முன்னர் இரு விமானிகளும் பாதுகாப்பாக வெளியேறியதால் உயிர்தப்பியுள்ளனர்.

கடலில் வீழ்ந்த விமானிகளை மீனவர்கள் தமது படகுகளின் உதவியுடன் காப்பாற்றியுள்ளனர். பயிற்சியில் ஈடுபட்ட விமானிகள் விமானத்தை தரையிறக்கிய பின்னர் மீண்டும் மேல் எழுந்த சமயம் இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாக வான்படை கட்டளை அதிகாரி கொமான்டர் பெத் ரீத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் போயிங் நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் இந்த விமானம் இலத்திரனியல் போர் தொழில்நுட்பம் கொண்டது. கடற்படையின் பாவனைக்காக உருவாக்கப்பட்ட இந்த விமானங்கள் அமெரிக்காவின் விமானந்தாங்கி கப்பல்களில் அதிகம்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# உக்ரேன் போருக்கு விரைவில் முடிவு

## புட்டினுடன் பேசிய ட்ரம்ப்



கடந்த 3 வருடங்களாக இடம்பெற்றுவரும் போருக்கு உடனடியான முடிவு காணப்படவுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடந்த புதன் கிழமை(12) தெரிவித்துள்ளார். ரஸ்ய அதிபர் விளமிடீர் புட்டினுடனான தொலைபேசி உரையாடலின் பின்னர் அவர் இதனை தெரிவித்துள்ளார். அதே தினம் அவர் உக்ரைன் அதிபர் வொளமிடீர் செலன்ஸ்கியுடனும் தொலைபேசியில் பேசியிருந்தார்.

ரஸ்ய அதிபரும் - அமெரிக்க அதிபரும் பேசியது தற்போது இடம்பெற்றுவரும் பூகோள அரசியலில் கடுமையான ஆச்சரியத்தை தோற்றுவித்துள்ளது.

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# உக்ரைனுக்கு வழங்கப்பட்ட உதவிகளை மீளப்பெறுவதில் ட்ரம்ப் தீவிரம்



உக்ரைன்- ரஸ்யா போரின் போது உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கிய 300 தொடக்கம் 350 பில்லியன் டொலர்கள் பெறுமதியான படைத்துறை மற்றும் நிதி உதவிகளுக்கு பதிலாக உக்ரைன் தனது நாட்டில் உள்ள 500 பில்லியன் டொலர்கள் பெறுமதியான கனிம வளங்களை வழங்கவேண்டும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை(12) உக்ரைனுக்கு பயணம் மேற்கொண்ட அமெரிக்காவின் திறைசேரிச்செயலாளர் ஸ்கொட் பெசன்ற் இது தொடர்பில் உடன்பாடு ஒன்றை எட்டவேண்டும் என தான் உத்தரவிட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் அதிபர் வொலமிடீர் செலன்ஸ்கியிடம் அமெரிக்க

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# வடக்கில் இருந்து வெளியேறியது இந்தியாவின் அதானி குழுமம்




இலங்கையின் வடமாகாணத்தில் இந்தியாவின் அதானி குழுமம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த 1 பில்லியன் டொலர்கள் பெறுமதியான காற்றாலை மின்உற்பத்தி திட்டத்தில் இருந்து தாம் வெளியேறுவதாக இந்த நிறுவனம் கடந்த வியாழக்கிழமை(13) தெரிவித்துள்ளது.

இலங்கையில் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அனுரகுமர திஸாநாயக்க அரசு அதானி குழுமத்தின் திட்டம் தொடர்பில் மீளாய்வு செய்யப்போவதாக தெரிவித்திருந்த நிலையில் அதானி குழுமம் தனது அறிவித்தலை வெளியிட்டுள்ளது. அதானி

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## உறக்கத்தில் உள்ள இனவாதத்தை மீண்டும் எழும்ப அனுமதிக்க முடியாது:

### அமைச்சர் சந்திரசேகர்



உறக்கத்தில் உள்ள இனவாதத்தை மீண்டும் எழும்ப அனுமதிக்க முடியாது. அதனால் தையிட்டி விகாரை விவகாரத்தை விரைவில் தீர்த்து வைப்போம் என கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2025ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்றைய தினம் (14) மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது, தையிட்டி விகாரை விவகாரம் விரைவில் முடிக்கப்பட வேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை அது ஏற்படுத்தும்.

உறக்கத்தில் உள்ள இனவாதத்தை மீண்டும் எழும்பவிடக் கூடாது. அதனால் அடிப்படையில் இவ்வாறான பிரச்சினைகள் உருவாகுவதை அனுமதிக்க முடியாது.

விகாரை விவாகரத்தில் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள், அப்பிரதேச மக்கள், மத தலைவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் முதலிய தரப்பினர்களுடன் விரைவில் பேசவுள்ளோம்.

விகாரை கட்டப்பட்டுள்ள காணியை மாத்திரம் தருமாறும், விகாரையை சுற்றியுள்ள ஏனைய காணிகளை மக்களிடம் மீள கையளிக்கத் தயாராக உள்ளதாகவும் விகாராதிபதி தெரிவித்துள்ளார்.

எனவே, விகாரை விவகாரத்தில் யாருக்கும் பாதிப்பில்லாத வகையில் அதனை தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை அலுவலகத்திற்கு சென்ற ஜூலி சங்



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை அலுவலகத்திற்கு நேற்று விஜயம் செய்தார்.

அவர் வருகையை அடுத்து, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்தார்.

அமெரிக்க தூதுவர் ஜூலி சுங்குடனான சந்திப்பு குறித்து கருத்து தெரிவித்த நாமல் ராஜபக்ஷ, அவர்கள் பரஸ்பர நலன் தொடர்பான கலந்துரையாடல்களில் ஈடுபட்டதாகவும், அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவை வலுப்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

## அரசாங்கத்தை செயல் திறனுள்ளதாக்கலென மக்கள் இறைமையை இல்லாதொழித்தல்

இன்றைய சமகால உலகில் அரசாங்கத்தை செயல் திறனுள்ளதாக்கல் என்கிற பெயரில் மக்கள் இறைமையை அழித்தல் என்பது அமெரிக்காவின் எலன் மஸ்க், ட்ரம்ப் கூட்டாண்மை வழி வளர்க்கப்படும் அரசியல் தத்துவமாக உள்ளது. இதற்காக ட்ரம்பின் 2வது ஆட்சிக்காலம் என அரசியலில் பேசப்படும் 2025ம் ஆண்டு சனவரி 20 முதலான காலத்தில் அமெரிக்காவில் எலன் மஸ்க்கின் நெறிப்படுத்தலில் அரசாங்கச் செயல் திறனுக்கான திணைக்களம் (Department of Government efficiency) ட்ரம்பால் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை ஆங்கிலத்தில் ‘டொஜ்’ (‘Doge’) என அழைக்கின்றனர். இந்த புதிய திணைக்களத்தின் செயற்பாடு பெயரளவில் அமெரிக்க ஒன்றியத்துள் எனச் சொல்லப்பட்டாலும் நடைமுறையில் உலகளாவிய நிலையில் எல்லா அரசாங்கங்களையும் தங்களின் ஆளுமைக்குள் ஏதோஒருவகையில் உட்படுத்துவதன் மூலம் உலகின் மூலவளங்களையும் முதலீடுகளையும் மனிதவலுவையும் அமெரிக்காவின் இன்றைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்தல் என்கிற உள்நோக்கினை கொண்டதாகவுள்ளது. இதற்கு நியாப்படுத்தலாக அமெரிக்கா எந்த அரசாங்கங்களுக்கு 1945 முதல் அதாவது இரண்டாவது உலகப் போர் முடிவடைந்ததின் பின்னர் அதிக நிதியளிப்புக்களைப் பொருளாதார உதவிகளை அளித்ததோ அந்த நாடுகளை எல்லாம் தமது நாடுகளாக மாற்றுவது அல்லது இருக்கும் அரசாங்கங்கள் வழி நிர்வகிப்பது என்பதாக அமைகிறது.

இந்த அடிப்படையில் தான் கனடாவை 51வது மாநிலமாகவும் பனாமாக் கால்வாயை மீளவும் தம் அகப்படுத்துவதும் மெக்சிகோ வளைகுடாவையே அமெரிக்க வளைகுடாவாக பெயர் மாற்றம் செய்வதும் பலஸ்தீனியத்தின் காசாசை தமதாக்கி அல்லது இஸ்ரேயல் ஆட்சியாளரான ‘பலஸ்தீன இனவழிப்புக் குற்றவாளியாகிய இஸ்ரேலிய இன்றையப் பிரதமர் நெத்தென்யாகுவின் ஒத்துழைப்புடன் தாம் நிர்வகித்து மத்திய கிழக்கின் கடற்கரை உல்லாசபுரியாக்கி பணம் உழைப்பதற்காக பலஸ்தீனியர்களுக்குக் காசாவுக்குத் திரும்பிச் சென்று வாழ உரிமையில்லையென ட்ரம்ப் அமெரிக்காவில் இருந்து முடிவெடுத்து யோர்தானை அவர்களின் ஒருபகுதியை ஏற்காது விட்டால் அமெரிக்கா யோர்தானுக்கான அனைத்து உதவிகளையும் சேவைகளையும் உடன் நிறுத்தும் என எச்சரித்துப் பயப்படுத்தியும் எகிப்தை மறுபகுதியை ஏற்கத்தான் வேண்டுமெனக் கட்டாயப்படுத்தியும் உலக அரசியலை தனது நாட்டு அரசியலாக மாற்றிக் கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி பரிசில் அனைத்துலக செயற்கை நுண்ணறிவுக் கருவிகளின் செயற்பாட்டு மாநாட்டில் இணைத்தலைவராகப் பணியாற்றிவிட்டு அந்த மாநாட்டின் பிரகடனங்களை ஏற்க மறுத்துக் கையொப்பமிடாது அமெரிக்காவும் பிரித்தானியாவும் இணைந்து அவமதித்த செய்தி பரவிக்கொண்டிருக்கையிலேயே அமெரிக்கா சென்று இந்தியா அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யும் முப்பது பொருள்களுக்கு வரிக்குறைப்பு செய்து ட்ரம்பை மகிழ்வித்திருக்கின்றார். இதன்வழி பிரான்சு அரசத்தலைவர் மக்ரோனையும் அமெரிக்க அரசுத்தலைவர் டொனால்ட் ட்ரம்பையும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கையும் ரஸ்ய அரசத்தலைவர் புட்டினையும் ஏககாலத்தில் கட்டி அணைக்கும் நாற்கரமுள்ள புதிய பிரம்மா தான் என்பதை நிரூபித்து அதிகாரங்களுக்கு அடிபணியும் மக்கள் தன்மானத்தை ஏறெடுத்தம் பார்க்காத தனது அரசியற் கொள்கை நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி உறுதி செய்துள்ளார். அதாவது பங்காண்மைகள் கூட்டாண்மைகள் வழி மக்களை அல்ல தங்கள் அரசாங்கங்களை செயல்திறனுள்ளதாக்கல் வழி நாட்டின் மூலவளங்ளையும் மூலதனங்களையும் மனிதவலுவையும் தமது ஆட்சியை நிலைநிறுத்த தாம் விரும்பியவாறு பயன்படுத்தல், விற்றல் என்பன இந்த அரசாங்கங்கள் அனைத்தினதும் இன்றைய அரசியல் கொள்கையாகவும் உள்ளது. இதற்குச் சிறிலங்காவின் இன்றை அரசத்தலைவர் அநூரகுமார திசநாயக்காவும் விதிவிலக்கல்ல. அவரின் இந்திய சீன வெளிநாட்டு ஆதாரநிலைப் பயணங்களும் தொடரும் சவூதி அரேபிய அனைத்து உலக அரசாங்கத்தலைவர்களின் மாநாட்டுப் பயணமும் தனது அரசாங்கத்தைச் செயல் திறனுள்ளதாக்கி அனைத்து மக்கள் இறைமையப் பொதுவாகவும் ஈழத்தமிழர்களின் மக்கள் இறைமையைச் சிறப்பாகவும் படிப்படியாக இல்லாதொழிப்பதன் வழி சிங்கள சிறிலங்கா அரசாங்கத்தின் செயல்திறனை வளர்த்து தனது ஆட்சியை உறுதிப்படுத்தல் என்பதாகவே அமைந்துள்ளது.

இத்தகைய ஒரு சூழலில்தான் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதை விட நாட்டின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தலே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முன்னுரிமையாகிறது. தையிட்டியில் பௌத்த விகாரைக்கென மக்கள் காணிகளை கையகப்படுத்தி அதற்கு இணையாக பலாலி விமான ஓடுதள நீளப்படுத்தல் அகலப்படுத்தலுக்கென அங்கும் மக்கள் காணிகளைக் கையகப் படுத்தி இஸ்ரேலின் பலஸ்தீனிய மக்கள் வாழும் மேற்குக்கரை இஸ்ரேலியக் குடியேற்றம் மாதிரி காங்கேசன்துறை முதல் மாதகல் வழி காரைநகர் வரையான வடதமிழீழத்தின் இந்துமாக்கடல் கரைப்பகுதியிலும் வளமான யாழ்குடாநாட்டு விவசாய மண்ணிலும் நிரந்தரமான சிங்களக் குடியேற்றமொன்றை அமைத்துக்கொள்ளுதல் அமைகிறது. இதனை எதிர்த்தே தங்கள் நிலத்தைத் தங்களுக்குத் தரும்படி வாழ்வாதாரத்தையும் வதிவிடத்தையும் இழந்த தையிட்டி மக்கள் சனநாயக வழிப்போராட்டங்களில் வேகமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்நேரத்தில் உலக அரசியலும் இலங்கையின் அரசியலும் வரலாறுகளைப் பேசுவதாலோ அல்லது பாதிப்புக்களை மீளவும் மீளவும் உரப்பக் கூறுவதாலோ எந்தத் தீர்வையும் ஈழத்தமிழர்கள் பெற முடியாது என்கின்ற எதார்த்தத்தைத் தமிழர்கள் உணரவேண்டும். ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு சனநாயக வழியில்தான் போராட வேண்டும் என்கிற போராட்ட முறைமை மாற்றம் பெற்றுள்ள நிலையில் ஈழத்தமிழர் வாழ்வின் ஒவ்வொரு அலகுகளும் புலத்தில் உள்ள ஈழத்தமிழர்களின் நிதியாலும் மதியாலும் சகோதரத்துவ உறவாலும் சமுக மூலதன இணைப்பாலும் அறிவளிப்புச் சத்தியூட்டலாலும் பாதுகாக்கப்பட வேண்டியதாகவும் ஈழத்தமிழர்களின் இறைமையுடன் கூடிய தாயக தேசிய தன்னாட்சி உரிமையுடன் கூடிய அவர்களுக்கான பாதுகாப்பான அமைதியான வாழ்வையும் வளர்ச்சிகளையும் உலக மக்களைக் கொண்டு புலமத்தில் உள்ளவர்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுமான மிகப்பெரிய கடமைப் பொறுப்பு புலத்தில் தமிழர்களுக்கு உள்ளது.

பலஸ்தீனியத்தின் காசா நீள்நிலப்பரப்பை மேற்குக்கரைப்பரப்பை எவ்வாறு மனிதப்படுகொலைகளாலும் உட்கட்டுமான அழிவுகளாலும் மனிதர்கள் வாழ இயலாத அளவுக்குச் சிதைத்து விட்டு நெத்தென்யாகுவும் ட்ரம்பும் இணைந்து அங்கு வாழ முடியாதுள்ள உங்கள் மேல் எங்கள் கருணை உங்களை இன்னொரு நாட்டில் படிப்பும் செல்வப்பிடிப்பும் அதிகாரப்பதவியும் உள்ளவர்களாக வாழ வைப்பதேயென ஆசைகாட்டி மோசம் செய்ய முயற்சிக்கின்றார்களோ இதே அரசியலைத்தான் சிங்கள பௌத்த அரசுக்கள் அன்றும் இன்றும் என்றும் செய்து ஈழத்தமிழர்களின் நில ஆக்கிரமிப்பு அரசியலைத் தொடர்கின்றார்கள். இந்நேரத்தில் ஈழத்தமிழரின் இறைமையுள்ள தேசமாக இலங்கையின் வடக்கு கிழக்கு வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இன்று வரை உள்ளதென்பதை உலக மக்களுக்குத் தெளிவுபடுத்தவும் வடக்கு கிழக்கின் தேச நிர்மாணத்தை உலக மக்களின் உதவியுடன் முன்னெடுக்கவும் கூடிய ஆற்றலாளர்களின் எல்லாத் துறைகளுக்குமான சமுகங்கள் அமைப்புநிலை பெறவேண்டும் என்பதும் இதன் கூட்டமைப்பாகப் பொதுக்கட்டமைப்புவொன்று வெளிப்பட வேண்டுமென்பதும் இதுவே ஈழத்தமிழர்களின் சமகால வாழ்வுக்கான ஒரே பலமாகும் என்பதும் இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது. 3வது உலகப் போருக்கான போர் மேகங்கள் கருக்கொள்கின்ற இக்கால கட்டத்தில் புலத்து தமிழரின் வாழ்வுக்கும் இது அவசியமாக உள்ளது என்பதும் இலக்கின் எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# மீண்டும் ஒரு பாரதியாய் அவன் பிறப்பான்!



1962 ஆம் வருடம் செப்டெம்பர் மாதத்தின் ஆறாம் நாள் மாலை. பாரதி என்ற சாதனையாளன் பிறக்கிறான். சத்திரசிகிச்சைக் பிரசவம். எனக்கு அப்போது பத்தொன்பது வயது. சந்திர சிகிச்சைப் பிரிவுக் கூடத்தின் வெளியே எல்லோரும் பதட்டமாய்க் காத்திருக்கிறார்கள். எமக்கென ஒதுக்கப்பட்ட அறையினுள் நான் மட்டும் உட் கார்ந்திருக்கிறேன். நேரம் ஏழு மணியாகிக் கொண்டிருந்தது. துணியால் மூடிப் போர்த்தியிருந்த பூப்போலக் குழந்தையை கையில் ஏந்தியபடி உள்ளே வந்த தாதி ஒருவர், குழந்தையை மெதுவாகத் தொட்டிலில் கிடத்துகிறார். ஆவல் மேலிட, எட்டிப்பார்க்கிறேன்.

சின்னக் கண்மணிகளை அங்குமிங்கும் அசைத்தபடி செக்கச் செவேலென்று உள்ளே கிடக்கிறது ஒரு ரோஜாப்பூ. எதிர்கால சாதனையாளன் ஒருவனைக் குழந்தையாய் முதல் முதலில் தரிசித்த பெருமை எனக்கே உரியதாயிற்று.

தவழ்ந்து தளர் நடை நடந்து, அவன் வளர்ந்த காலம் முழுவதும் நான் கூடவே இருந்ததாலோ என்னவோ, பாரதிக்கும் எனக்குமான பிணைப்பு, அவனை ஒரு பிள்ளையாகவே நான் நினைக்குமளவுக்கு அற்புதமான ஒன்று.

ஏணையில் போட்டுப் பாட்டுகள் பாடி அவனைத் தூங்க வைப்பேன். அந்த இரண்டரை வயசுக் குழந்தைக்கு மிகவும் பிடித்தமானது, "ஆற்றோரம் மணலெடுத்து அழகழகாய் வீடு கட்டி" என்ற பாடல். பாடலைப் பாடி முடித்து, அவன் தூங்கிவிட்டானா என்று அறிவதற்காக மெது மெதுவாக ஏணையை விலக்கி உள்ளே பார்ப்பேன். இரண்டு குட்டிச் சூரியன்களாய்க் கண்கள் மின்ன, "ஆற்றோரம் பாடுங்கோ இனி" என்றந்த மழலைக் குரல் என்னைக் கேட்கும். மீண்டும் பாடுவேன். ஒரு தடவைக்கு இரண்டு மூன்று தடவைகள் இப்படித் தனது நேயர் விருப்பப் பாடலைக் கேட்ட பிறகே ஆழ்ந்து தூங்குவான். (வீட்டில் எல்லோரும் என்னை "இணி" என்றே கூப்பிடுவார்கள்.)



இனி தான் பல் துலக்கி விட வேண்டும்.. இனி தான் முகம் கழுவிவிட வேண்டும்.. இனி தான் உணவு ஊட்டி விட வேண்டும் .. என்பவை பாரதிக் குழந்தைக்கும் எனக்குமிடையில் இருந்த எழுதப்படாத விதி.



ஒரு சட்டை மீது பிரியம் வைத்தால் அதைக் கழற்றவே விட மாட்டான். எதிர்பாராமல் நிகழ்வது போல தண்ணீரை அவன் மீது ஊற்றி விடும் பட்சத்தில் மட்டுமே சட்டையைக் கழற்றுவான்.

**சாவித்திரி அத்துவிதானந்தன்**

மண் தின்னுவதில் அலாதி பிரியம், சும்மா குனிவது போலக் குனிந்து ஒரு பிடி மண்ணை உள்ளங்கையில் அள்ளிக் கொண்டு வேகமாக ஓடி, அப்படி ஓடும் போதே மண்ணை வாய்க்குள் கொட்டிக் கொள்வான். [பிறந்த மண் மீதும் மக்கள் மீதும் பாரதி கொண்டிருந்த அளவிலா நேசிப்பின் ஒரு குறியீடாகவே அவனுடைய இந்த மண் பிரியத்தை இன்று பாரதியின் செயல்பாடுகள் மொழி பெயர்ப்பதாக என் உள் மனம் சொல்கிறது] பாரதிப் பையனிடம் நாங்கள் ரசித்து அனுபவித்த குறும்புகள் இது போன்ற இன்னும் பல .

வளர்ந்து, பதின்ம வயதுப் பையனாக யாழ். இந்துவின் மாணவன் பாரதி, ஒல்லியாய், உயரமாய் எல்லோருடனும் அன்பாகப் பழகினான். 'முன்னாளின் குறும்புக்கார பையனா இவன்?' என்று கேட்குமளவுக்கு அமைதியும் மென்மையும் இணைந்த பண்பு அவனுடைய அடையாளம் ஆயிற்று. படிக்கும் போதே, பாரதியின் ஆர்வமும் ஈடுபாடும் ஊடகப் பரப்பின் மீதே பெருமளவு கவனம் குவிந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. அவனது தந்தையார் இராஜநாயகன் எனது சின்னண்ணா. மறுமலர்ச்சிக்கால எழுத்தாளர்களின் வரிசையில் ஒருவர். சிறந்த படைப்பாளி என்று இனங்காணப்பட்டவர். மகன் காட்டிய இந்த ஆர்வத்துக்கு அந்த அப்பா மகிழ்ச்சியோடு ஊக்கம் கொடுத்தார்.

கல்லூரிப் படிப்பை நிறைவு செய்த பின் ஈழமுரசு, முரசொலி பத்திரிகைகளின் இளநிலைச் செய்தியாளனாகப் பணி துவங்கினான். ஈழமுரசுப் பத்திரிகையின் முதல் பக்கத்தில் இ. பாரதி என்று அறிமுகம் செய்யப்பட்ட இந்த இளம் செய்தியாளன், செய்தி சேகரிப்பில் காட்டிய ஆர்வம் அலாதியானது.

இந்த அதீத ஆர்வத்தினால் அவலத்தில் அவன் சிக்கிய கதையும் ஒன்று உண்டு. 1985 ஆம் வருடம் பெப்ரவரி மூன்றாம் நாள் இரவு, யாழ், கச்சேரியடியில் குண்டுவெடிப்பின் ஒலியொன்று கேட்கிறது. மறுநாள் இலங்கையின் சுதந்திரதினம் ஆயிற்றே. இது எதற்காக யார் செய்திருப்பர்? என்று அறியும் ஆவலில் இந்த 22 வயதுச் செய்தியாளன் மிதிவண்டியில் அந்த இடம் நோக்கி விரைகிறான்.

பதுங்கி நின்ற சிங்களப் பாதுகாப்புப் படையினர் பாரதியைக் கைது செய்து குருநகர் படை முகாமுக்குக் கொண்டு போய் விட்டார்கள். பின்னர், பத்திரிகை ஆசிரியரின் முயற்சியால், அப்போது உதவி அரச அதிபராக இருந்த திரு. மாணிக்கவாசகரின் தலையீட்டில் அவன் விடுவிக்கப்பட்டான்.



'கவச வாகனத்தில் ஏற்றப்பட்ட முதல் தமிழ் ஊடகர்' என்று இது பற்றி ஒரு அன்பர் பதிவிட்டிருந்தது நினைவுக்கு வருகிறது. அந்தக் காலப் பகுதியில்தான் பாரதி, இலங்கை, தமிழ் அரசியல் வரலாற்றை ஈழ முரசு பத்திரிகையில் தொடராக எழுதினான். அந்தத் தொடருக்கு அவன் வைத்திருந்த 'வாளேந்திய சிங்கத்தின்கதை' என்ற தலைப்பை நாங்கள் மிகவும் ரசித்துப் பாராட்டினோம். மிகவும் ஆர்வத்துடன் நான் அவன் தொடரை வாசித்தேன். இதைவிட, 'கல்ஓயாக் குடியிருப்புத் திட்டம்' பற்றிய ஒரு தொடரையும்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# மக்களின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த ஊடகப்போராளி

வேல்ஸில் இருந்து **அருள்**





தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் வெளிவந்த ஈழமுரசு பத்திரிகைளில் ஆரம்பித்து, முரசொலி, ஞாயிறு தினக்குரல் மற்றும் வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியவரும், பொருண்மியம் என்ற சஞ்சிகை, இலக்கு மின்னிதழ், இலக்கு இணையம் மற்றும் அனைத்துலக உயிரோடைத்தமிழ் வானொலி ஆகிய ஊடகங்களில் இறுதிவரையிலும் பணியாற்றிய மூத்த ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதி அவர்கள் கடந்த வாரம் எங்களை விட்டு பிரிந்து சென்றதை இன்றுவரை எமது மனம் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது.



தமிழீழ மக்களின் விடுதலைக்காக விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் இருந்து தமிழ் மக்களின் அவலங்கள், அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், விடுதலைப் போராட்டம் தொடர்பான பார்வை என மக்களுக்கான தகவல்களை ஊடகத்துறையில் சரியான முறையில் வழங்கிய பெருமையை கொண்டவர் அவர்.

விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் இடம்பெற்ற முதாலாவது வரலாற்றுச் சிறப்புமிக்க கைதிகள் பரிமாற்றத்தின் போது ஒரு ஊடகவியலாளராக அதில் பங்கெடுத்து அந்த நிகழ்வை மக்களிடம் சரியான முறையில் கொண்டு சென்று சேர்த்ததில் அன்று இளம் ஊடகவியலாளராக பணியாற்றிய பாரதி அண்ணாவின் பங்களிப்பு முக்கியமானது.

எனக்கும் பாரதி அண்ணவுக்குமான தொடர்புகள் 2005 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பித்திருந்தது. தமிழ் நாதம் மற்றும் புதினம் இணையத் தளங்களுக்கு கொழும்பில் இருந்து கொண்டு தனது ஊடகத்துறை அனுபவங்களையும், உதவிகளை யும் அன்று வழங்கிவந்தவர் பாரதி அண்ணா. எனது ஆரம்ப கால கட்டுரைகளை சரிபார்த்து ஈழநாதத்திற்கு பதிவேற்றம் செய்யும் பணிகளையும் அவர் பல தடவைகளில் மேற் கொண்டிருந்தார்.

ஆனால் அதன் பின்னர் 2018 ஆம் ஆண்டு இலக்கு இணையத்தளம் மற்றும் மின்னிதழ் என்பன ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதில் அகிலன் என்ற பெயரில் கட்டுரைகளையும், செய்திகளை யும் வழங்கி வந்ததுடன், அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலிக்கும் அவரின் செய்தித் தொகுப் பும், நேர்காணல்களும் வலுச்சேர்த்திருந்தன.

முரசொலி என்னும் பத்திரிகையை நடத்திய அவரது




நண்பரான திருச்செல்வம் அவர்களின் புதல்வன் அகிலன் அவர்களை 1988-89 காலப் பகுதியில் இந்திய இராணுவத்துடன் இணைந்து இயங்கும் துணை இராணுவக்குழுவினர் இந்திய படைகளின் உதவியுடன் படுகொலை செய்திருந்தது. அந்த அப்பாவி இளைஞனின் பெயரை தான் தனது புனைபெயராகக் கொண்டு இலக்கு ஊடகத்தில் கட்டுரைகளை எழுதிவந்திருந்தார்.



இலங்கையின் அரசியல் நிலவரம், தாயகத்து அரசியல் நிலவரங்களை நடுநிலமை தவறாது தருவதில் அவரின் திறமை அசாத்தியமானது. ஆழமான பார்வையுடன் களநிலமையின் யதார்த்தத்தை கொண்டுவரும் அவரின் எழுத்து ஆற்றல் கண்டு பல தடவைகள் நான் வியந்ததுண்டு. இந்த பெரிய எழுத்து ஆற்றல் கொண்ட அந்த மனிதர் எம்முடன் பேசும்போது காட்டும் அன்பும், பொறுமையும், மிகவும் அற்புதமானது. எமது இலக்கு மின்னிதழ் குழுவின் வாரந்த கூட்டத்தில் நாம் முக்கிய தருணங்களில் தான் பாரதி அண்ணாவை அழைப்பதுண்டு. அவரின் வேலைப்பளு எமக்கு தெரிந்ததால் நாம் அவரின் நேரத்தை கருத்திற் கொண்டு அவ்வாறு செய்வதுண்டு.

ஆனால் அந்த கூட்டத்தில் மிகவும் பக்குவமாக தனது கருத்துக்களை முன்வைப்பதுடன், மிகவும் பொறுமையாக எமது கருத்துக்களை உள்வாங்கி தனக்குரிய பணியை மிகவும் திறப்பட செய்து முடிக்கும் அவரின் பணிவும், தன்னடக்கமும், ஆளுமையும் நாம் அவரிடம் கற்றுக்கொண்ட பாடங்களில் ஒன்று.



தமிழீழ ஊடகப்பரப்பில் ஆளுமைமிக்க, தரம்வாய்ந்த ஊடகவியலாளர்கள் என்பது மிகவும் சொற்பமானது. அது தான் எமது போராட்டத்தின் பின்னடைவுக்கான காரணிகளில் ஒன்று. ஆனால் அவ்வாறு இருக்கும் ஊடகவியலாளர்களையும் நாம் இழந்துகொண்டிருப்பது மிகவும் வேதனையானது.

அவரின் தந்தை இராஜநாயகம் மாஸ்ரரும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# மட்டக்களப்பில் மேய்ச்சல் தரை அபகரிப்பு

## சிங்களப்பிரதிநிதிகளை உருவாக்கும் சதி.!

பா.அரியநேத்திரன்

கிழக்கு மாகாணத்தில் பால்தரும் எருமை, பசுமாடுகள் ஏறக்குறைய 101,726 காணப்படுகின்றன.



இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறக்குறைய நான்கு இலட்சம் எருமை, பசு மாடுகள் உள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியான பொலனறுவை மாவட்டங்களின் எல்லை பகுதியாக மயிலத்தமடு மற்றும் மாதவணை பிரதேசங்கள் காணப்படுகின்றன. இப்பகுதிகள் வனப் பகுதிக்கு மத்தியில் அமைந்துள்ளன. பட்டிப்பளை பிரதேசசெயலக பிரிவு கெவிளியாமடு காத்தமல்லியார்சேனை வெட்டிப்போட்டசேனை விக்சிச்தோட்டம், மணல் ஏற்றம், ஆகியபகுதிகளிலும் மேய்ச்சல் தரைகள் உள்ளன. ஊர்காவல்படையினர் உதவியுடன் வெளிமாவட்ட பொலனறுவை, அம்பாறை சிங்களவர்கள் பயிர்செய்கை என்ற போர்வையில் அத்துமீறி குடியேற்றப்படுகிறார்கள்.பண்ணையாளர்களுக்கெதிரான செயற்பாடுகளைத் தடுப்புக்குரிய முயற்சிகளும், கவனயீர்ப்பு போராட்டங்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் நடைபெற்றுக் கொண்டே இருக்க அத்துமீறல்களும் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன.



தமது கால் நடைகளைத் தேடிச் சென்ற பண்ணையாளர்கள் தாக்கப்படுவார்கள்; கைது செய்யப்படுவார்கள்; பண்ணை நடவடிக்கைகளுக்காக அமைத்திருக்கும் குடிசைகள் நாசம் செய்யப்படும்; கால்நடைகள் கொல்லப்படும்; கவரப்பட்டு கப்பம் கோரப்படும். இவ்வாறு பல இன்னல்களை அனுபவித்தபடியே, தங்களது கால்நடைகளைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தின் பண்ணையாளர்கள் இருக்கிறார்கள்.

உண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரைகளில் அத்துமீறி சிங்களவர்களை குடியேற்றுவதற்கான நோக்கம் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே தமிழர்கள் கூடுதலாக வாழும் மாவட்டமாகும். 2012, உத்தியோக பூர்வ கணக்கெடுப்பின் புள்ளி விபரத்தின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில்

**தமிழர் 72.61%,இஷ்லாமியர் 25.49%,**
**சிங்களவர்1.17%, பரங்கியர் 0.53%**
**ஏனையோர் 0.21%**

வீதமும் வாழ்கிறார்கள். 2012,க்கு பின்னர் இலங்கையில் உத்தியோகபூர்வ கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை.



சிங்களவர்களை 1.17 % வீதத்தில் இருந்து அதிகரிக்கவே சிங்கள குடியேற்றம் நடைபெறுகிறது. அதன்மூலம் தமிழர்களின் விகிதாசாரத்தை குறைக்கவும், எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள மக்கள் பிரதிநிதிகளை உருவாக்கவும் மேற்கொள்ளும் நீண்ட கால சதித்திட்டத்தின் வெளிப்பாடகவே இதனை பார்க்க முடிகிறது.

ஈழவிடுதலை ஆயுத போர்க்காலத்தில் இவ்வாறான அத்துமீறல்கள் காணப்படவில்லை அப்போது விடுதலைப்புலிகளின் நடமாட்டம் காரணமாக அத்துமீறிய சிங்கள குடியேற்றங்கள் இப்பகுதிகளில் இருந்ததில்லை, போர் முடிந்த கையோடு 2009, மே,18, க்கு பின்னரே அத்துமீறிக் குடியேற்றம் தொடர்கிறது. இவர்களை வெளியேற்றுவதற்கு கிழக்கு முதலமைச்சர் ஆளுநர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அப்போது பயனளிக்கவில்லை. 2015இல் ஆட்சி மாற்றத்தையடுத்து 2016இல் அத்துமீறல் செய்த 99 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதோடு, நீதிமன்றக் கட்டளையின் அடிப்படையில் அவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டார்கள். இந்த நடவடிக்கைகள், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்புடன் நடைபெற்றன.



கிழக்கு மாகாண சபை 2017 செப்டெம்பரில் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அத்துமீறுவோரின் நடவடிக்கைகள் மீண்டும் நிகழ ஆரம்பித்தன. இப்போது வரை தடுத்து நிறுத்த முடியவில்லை அது பரவிக்கொண்டே இருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரை இல்லாத நிலையில், பல தடவைகளில் நிரந்தரமான மேய்ச்சல் தரைக்காக வர்த்தமானி அறிவித்தலை வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அது திட்டமிட்டு அரசால் நிறைவேறாது போயிருக்கிறது. மகாவலி அதிகாரசபையும் அதனை தடுக்கிறது.



'நாமெல்லோரும் இலங்கையர்கள்' என்ற அடிப்படையிலும், இலங்கையர் எல்லோர் தொடர்பிலும் சட்டங்கள் பாராபட்சமின்றிப் பிரயோகிக்கப்பட வேண்டும். ஆனால் பாரபட்சமாகவே கடந்த ஆட்சிகளில் எல்லாம் இது நடந்தது. தற்போது தேசிய மக்கள் சக்தி புதிய ஜனாதிபதியாக அநுர பதவி ஏற்று 159, பெரும்பான்மை ஆசனங்களுடன் ஆட்சியில் உள்ளபோதும் "கிளின் ஸ்ரீலங்கா" என்ற கோஷத்தால் மேய்ச்சல் தரைக்கான பிரச்சினை தீர்க்கப்படவில்லை. மாறாக மேய்ச்சல் தரைகளில் இருந்து மாடுகளை கிளின் செய்வதையே காணமுடிகிறது. பொருளாதாரத்தை முதன்மைப்படுத்தும் ஜனாதிபதி அநுர கால்நடைகள் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அடிப்படை பிரச்சினையாக உள்ள மேய்ச்சல் தரை தீர்க்கப்படாமல் தொடருமானால் பால் உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்படும்.



கடந்த 2024, ம் ஆண்டு மட்டும் 1,750 க்கும் மேற்பட்ட மாடுகள் கொல்லப்பட்டும், பிடிக்கப்பட்டும், சித்திரவதைகளுக்கு உள்ளாகியும் உள்ளன. 1974ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்தப்பட்டு வரப்படும் பிரதேசமே மயிலத்தமடு, மாதவணை, கெவிளியாமடு

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# இலங்கை சுதந்திர தினம்:




# தமிழர்களுக்கு எப்போது?

இலங்கை சுதந்திரம் பெற்று 77 வருடங்கள் நிறைவு பெற்றுவிட்டது. 77 ஆவது சுதந்திர தினத்தில் அவதானிக்கக்கூடிய சில அவதானிப்புக்களாக நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி சிங்களத்தில் ஆற்றிய உரைக்கு தமிழ் சமகால மொழி பெயர்ப்பு இடம் பெற்றது.



ஜனாதிபதி தனது உரையில் “நாட்டுக்கான முழுமையான பொருளாதார சமூக, கலாச்சார சுதந்திரத்தை வென்றெடுக்கும், போராட்டக்களத்தில் நாம் அனைவரும் போராட்டக்காரார்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும் தாய் நாட்டுக்காக நாம் அனைவரும் ஒற்றுமையாக சுதந்திரப்போராட்டத்தை, தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும் என தனது ஆணித்தரமான கருத்தை முன்வைத்துள்ளார்.

ஏதோ ஒரு வகையில் 77 ஆவது சுதந்தர தின சம்பவங்கள் இலங்கையில் புதிய பாதையைத் திறப்பதற்கான குறிகாட்டியாக மாறியிருக்கிறது என்ற நம்பிக்கையை ஜனாதிபதி ஆற்றிய உரை தமிழ் பேசும் மக்கள் மத்தியில் மாத்திரமல்ல இலங்கையிலுள்ள மலையக மக்கள், முஸ்லீம் சமூகத்தவர்கள் அனைவரது மனதை தொடும்படி தனது கருத்தை வெளிப்படுதியிருக்கிறார்.



இருந்த போதிலும் இதே சமயம் இலங்கையின் சுதந்திர நிகழ்வுகளை பகிஷ்கரிக்கும் சம்பவங்களும் பல பகுதிகளில் இடம் பெற்றிருந்தது. உதாரணமாக 77 ஆவது சதந்திர தினத்தை கரிநாளாக வட கிழக்கில் பிரகடனம் செய்து துக்க நாளாக



அனுஷ்டிக்கப்பட்டது, பாரிய கவனயீர்ப்புப் போராட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. இக் கவனயீர்ப்புப் போராட்டத்தின்போது அவர்கள் கோரிக்கையாக இனப்பிரச்சினைக்கான தீர்வு வழங்கப்படவேண்டுமென்றும் இனப்படுகொலைக்கான நீதி நிலை நாட்டப்படவேண்டுமென்றும் மக்களால் கோரப்பட்டிருந்தது.



## திருமலை நவம்

இதே நேரம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வட கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டித்து தமது எதிர்ப்பை தெரிவித்திருந்தனர். இதே போன்றே சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி கிளிநொச்சியில் மாபெரும் போராட்டம் நடத்தப்பட்டதோடு இறுதி யுத்தத்தில் படு கொலை செய்யப்பட்டவர்க்கு நீதி கோரியும் காணாமல்ஆக்கப்பட்டவர்களுக்கானநீதிகோரியும் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் கோஷிக்கப்பட்டும் போராட்டம் நடத்தப்பட்டது.

இப்போராட்டங்களை நடத்தியவர்கள் சுதந்திரதினஅறிக்கையொன்றையும்வாசித்தார்கள். அவ்வறிக்கையில், இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தியுள்ளோம். இத்தீவின் வடக்கு கிழக்கை தாயகமாகக் கொண்ட தமிழ்த்தேசத்தை ஆக்கிரமித்து குறித்ததினத்தில்சிங்களஏகாதிபத்தியத்திடம் கையளித்து பிரித்தானியர் சென்றுள்ளார்கள், அதிலிருந்து என்று விடுதலை பெறுகிறோமோ அன்றே தமிழ் மக்களுக்கான சுதந்திர தினமென சுட்டிக் காட்டியிருந்தார்கள்.

இதே போன்றே தியாகி திலீபனின் நினைவுத்தூபிக்கு முன்பாக கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் இடம் பெற்றிருந்தது. எல்லா எதிர்ப்புகளுக்கு அப்பால் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பறந்து கொண்டிருந்த இலங்கையின் தேசியக் கொடி இறக்கப்பட்டு கறுப்புக் கொடி ஏற்றப்பட்டதடன் வளாகம் முழுவதும் கறுப்புக் கொடி பறக்கவிடப்பட்ட சம்பவமும் இடம் பெற்றள்ளது.

சுதந்திர தினக் கொண்டாட்டம் என்பது நாட்டில் வாழும் அனைத்து தேசிய இனத்தவர்களாலும் பாகுபாடின்றி உணர்வுடனும் உரிமையுடனும் தேசிய எழுச்சியுடனும் கொண்டாடப்படுகிற விழாவாகும். இதில் குறைபாடு இருக்குமானால் அதை தேசிய சுதந்திரமாக கருத முடியாது.




தேசிய இனம் என்பது, மொழி மதம், இனம், ஒருமைப்பாடு கலாச்சாரம், அரசியல் உணர்வு போன்ற பண்புகளை உடையதும், தேசியக் கொடி, தேசிய கீதம் இறந்த கால வரலாற்றையும் கொண்ட மக்கள் குழு என ஒரு அறிஞர் வரைவிலக்கணப்படுத்தியுள்ளார். இதே போன்றே சுதந்திரம் பற்றி விளக்கிய அறிஞர்கள், ஒரு மனிதன் தடைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்படாமல் ஏனையவர்களின் சுதந்திரத்துக்கும் பங்கம் ஏற்படாத வகையில் தான் விரும்பியதை செய்வதற்குரிய உரிமைகளே சுதந்திரம் என்று சுதந்திரத்துக்கு வரைவிலக்கணம் வழங்கியுள்ளனர். இந்த வரைப்படுத்தலுக்கு உட்பட்ட வகையில் இலங்கையில் வாழும் தேசிய இனத்தவர்களாக காணப்படும் தமிழர்கள் முஸ்லீம்கள் மலையகத்தோர் பறங்கியர்கள் என்போர் சுதந்திரமாக வாழுகிறார்களா என்பது சந்தேகத்துக்குரிய கேள்வியாக்கப்படுகிறது.

இலங்கை இந்திய உபகண்டத்துக்கு அருகில் இருக்கின்ற காரணத்தினால் அன்னியர் ஆட்சியால் அங்கேற்பட்ட மாற்றங்களுக்கு ஏதோ ஒருவகையில் ஆட்பட்டு சுமார் நானூறு வருடங்களுக்கு மேலாக அடிமைப்பட்டுப்போய் கிடந்த இத்தீவு 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தை பெறும் வாய்ப்பை பெற்றுக் கொண்டது. இந்த சுதந்திரத்தை பெறுவதற்காக இலங்கை மக்கள் இந்திய உபகண்டத்தைப்போல் அதிக விலை கொடுக்காவிட்டாலும் பல்வேறு வழிகளில் தியாகங்களை செய்துள்ளனர் அந்த தியாகத்துக்குள் தேசிய இனத்தவரான தமிழர்கள் முஸ்லீம்கள்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# இலங்கையை ஆக்கிரமித்த இந்திய, உலகப் பேரரசுகள்

## பகுதி 3 பாகம் 6

உலகளாவிய அர்த்தத்தில் எங்கு பேரரசுகள் எழுகின்றனவோ அங்கெல்லாம் அவை ஓர் உயிரியைப் போல தாம் வாழும் அண்டைய பிரதேசத்துக்குள் தமது கால்களை அகட்டி நகர்ந்து பரவும். அது இந்தியப் பேரரசுக்கு விதிவிலக்கானது அல்ல. கி.மு நான்காம் நூற்றாண்டில் முதலாவதாக இந்தியாவில் எழுந்த மௌரியப் பேரரசு அண்டை நாடுகளை நோக்கிப் பரந்து விரிவடையத் தொடங்கியது. மௌரியப் பேரரசு அசோகச் சக்கரவர்த்தியின் தலைமையில் பேரரச தத்துவமாய் கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றிய பௌத்த மதத்தைக் கையில் எடுத்து அதன் வழி பௌத்த மத வடிவில் பேரரசர் ஆதிக்கம் கி.மு 3 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்குப் பரவியது.



அதேவேளை, பேரரசுகளின் எழுச்சியையும் வளர்ச்சியையும் தாண்டி பேரரசுகளை அண்டிய பகுதிகளில் தப்பிப் பிழைத்து வாழும் சிறிய அரசுகளும் உண்டு என்பதும் கவனிக்கத்தக்கது. இந்தவகையில், அரசுகளின் அல்லது பேரரசுகளின் ஆக்கிரமிப்புக்கு எதிரான ஒரு முக்கிய அரசியல் கோட்பாடு கி.பி 1648 ஆம் ஆண்டு வடிவம் பெற்ற வெஸ்பாலிய உடன்படிக்கை (The Treaty of Westphalia) - அரசுகள் ஒன்றை ஒன்று அனுசரித்து சமாதானபூர்வமாக வாழ வேண்டும் என்றும் ஓர் அரசை இன்னொரு அரசு ஆக்கிரமிக்கக்கூடாது என்றும் சர்வதேச பரிமாணம் மிக்க உடன்பாடு ஏற்பட்டது. வரலாற்றில் இது அப்படியே நடைமுறைப்படுத்தப்பட்டது என்று சொல்வதற்கு இல்லை ஆயினும், பெரிய அரசுகளை அண்டி சிறிய அரசுகள் வாழும் வரலாற்று நடைமுறையும் உண்டு. இது பெரிய - சிறிய அரசுகளுக்கு இடையே உறவுகளைக் கையாளும் அரசியல் கலையில் தங்கி உள்ளது என்பதும் கண்கூடு. இப்பிரச்சினையைக் கட்டுரையின் இறுதியில் ஆராயலாம்.

### மகாவம்ச மனப்பாங்கு

கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பரவிய அசோகப் பேரரசு தேரவாத (Theravada) மகா சங்கத்தையும் தேரவாத பௌத்த அரசையும் இலங்கையில் ஸ்தாபித்தது. எப்படியோ அசோகப் பேரரசினது பேரரச ஆதிக்கத்திற்கு இலங்கை பணிந்தது. அரசும் மதமும் பேரரச ஆதிக்கத்தில் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்று வரலாற்றாளர்கள் கூறுவது சரி.



கி.மு 2 ஆம் நூற்றாண்டு அளவில் (கி.மு 150 - 100) இந்தியாவில் இன்னொரு பௌத்த பிரிவாக மகாயான பௌத்தம் (Mahayana Buddhism) எழுந்தது. அது தென்னிந்தியாவில் வலுவடைந்து, கி.பி 3 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மன்னன் மகாசேனன் (Mahasena 277 - 304 AD) காலத்தில் சோழ நாட்டைச் சேர்ந்த தமிழ் பௌத்த துறவியான சங்கமித்தர் (Sangamittar) தலைமையில் இலங்கைக்குள் நுழைந்தது. அம்மதப் பிரிவு மன்னன் மகாசேனனால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அரச மதமாய் உருப்பெறத் தொடங்கியது. அக்காலத்தில் இலங்கையில் தேரவாத பௌத்தம் தடை செய்யப்பட்டு அதன் மகாவிகாரையும் மகா சங்கத்தினரும் தாக்கப்பட்டனர்.



**மு.திருநாவுக்கரசு**



இதனால் தேரவாத பௌத்த பிரிவுக்கும் மகாயான பௌத்த பிரிவுக்கும் இடையே வன்முறை, வாளேந்திய போர்முனை உருவான சூழலில் இறுதியாக மன்னன் மகாசேனன் மீண்டும் தேரவாத பௌத்தத்துக்கு மாறியதும் மகாயான தலைமை மதகுருவான சங்கமித்தர் படுகொலை செய்யப்படுவதுடன் இத்தகைய மதப்பூசல் முடிவுக்கு வந்தது.

இங்கு பௌத்தம் - அரசு - அரசியற்கொலை (Assassination), அதுவும் ஒரு தலைமை பௌத்த துறவி அரசியற்கொலை செய்யப்பட்டமை என்பன ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்த ஒரு வரலாற்றுத் திரட்சியைக் காணலாம்.

கி.பி 433 ஆம் ஆண்டில் தென்னிந்தியாவிலிருந்து பாண்டிய வம்சத்தைச் சேர்ந்த அறுவர் அநுராதபுர இராச்சியத்தைக் கைப்பற்றி 26 ஆண்டுகள் ஆண்டனர். இக்காலத்தில் பாண்டியர்களால் தேடப்பட்டுவந்த தாதுசேனனை (Dhathusena) பௌத்த மகா விகாரையின் தலைமை மதகுருவும் தாதுசேனனின் மாமனும் ஆகிய மகாநாம தேரர் (Mahanama Thero), தனது மருமகனாகிய தாதுசேனனை பௌத்த துறவியாக மாறுவேடமிட்டுப் பாதுகாத்து வந்தார். இறுதியாக பாண்டியர் ஆட்சியை தாதுசேனன் முடிவுக்குக் கொண்டுவந்து 459 ஆம் ஆண்டு அநுராதபுரத்தின் மன்னனாய் முடிசூடிக் கொண்டார்.




இத்தகைய வரலாற்றுப் பின்னணியிற்தான் மேற்படி மகாநாம தேரரினால் கி.பி 5 ஆம் நூற்றாண்டளவில் பௌத்த-அரசியல்-வரலாற்றைக் கூறும் மகாவம்சம் என்ற நூல் முன்னைய பதிவுகளில் இருந்து திரட்டியும், தொகுத்தும், புனைந்தும் வரையப்பட்டது. அவ்வாறு அவர் எழுதியதற்கும் அப்பால் பிற்காலகட்ட வரலாற்றுச் சூழல்களில் அவ்வப்போது தேவைப்பட்ட இன, மத, அரச நோக்கங்களுக்குப் பொருத்தமாக மகா வம்சத்தில் விஷமத்தமான இடைச் செருகல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்நூலில் சொல்லப்படுபவை எவ்வளவு தூரம் சரி - பிழை, நல்லது - கெட்டது, உண்மை - பொய் என்பனவற்றிற்கு அப்பால் அது, அரசியல்ரீதியாக சிங்கள பௌத்தர்களின் மனப்பாங்கையும் அரசியல் போக்கையும் வடிவமைக்கும் ஒரு கருத்தியலாய் நடைமுறை அரசியலில் முன்னெடுக்கப்படுகிறது.

### இந்தியாவில் பேரரசு எழ அது இலங்கைக்குப் பரவியது.

இந்தியாவில் தேரவாத பௌத்தம் எழ அது இலங்கைக்குப் பரவியது. இந்தியாவில் மகாயான பௌத்தம் எழ அது இலங்கைக்குள் நுழைந்து சவாலாய் எழுந்தது.

இவ்வகையில், இந்தியா தொடர்பாக இலங்கையில் ஏற்படக்கூடிய அரசியல் மாற்றங்கள் வெறுமனே அவ்வப்போதைய காலகட்டங்களுக்குரிய வரலாற்றுத் துடிப்பு நிலையாக (Historical trend) மட்டுமன்றி அதனையும் உள்ளடக்கிய நீண்டு நெடிய வரலாற்று வளர்ச்சிப் போக்குக்கு (Historical process) உரியதாயும் அமையும் நிலையில் அது இலங்கையின் வரலாற்றியலாயும் (Historiography) வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது, வரலாற்றைப் பார்க்கும் பழக்கப்பட்ட ஒரு பக்கப் பார்வை இயலாய் இது அமைந்துள்ளது. இதனை 'மகாவம்ச மனப்பாங்கு' என்று அழைப்பர்.

**தொடரும்...**

# உலகத் தாய்மொழி தினம்

திருமதி. சுரந்தினி ரமேஸ்
B.A (HONS)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### முன்னுரை

**உலகின் ஏனைய மொழிகளுக்குச் சொந்தக்காரர்களுடன், 'தினம் தினம் தமிழ் மொழியைத் தாயாகக் கொண்டாடும் நாமும் இணைந்து உலகத் தாய்மொழி தினத்தைக் கொண்டாடுவதில் பெருமகிழ்வு கொள்வோம் உலகத் தாய்மொழி தினம் பெப்ரவரி 21 அன்று கொண்டாடப்படும் இத்தருணத்தில் உங்கள் அனைவருக்கும் தாய்மொழி தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் தாய்மொழி பற்றி என் உள்ளக்கிடக்கையில் பொதிந்துள்ள சிந்தனைத்துளிகளில் சிலவற்றைப் பகிர்ந்துகொள்ள விளைகின்றேன். 'இலக்கு' என்னும் வாரப் பத்திரிகையில் எனது எழுத்துகள் இடம்பெறக் காரணமானவர்களுக்கு நன்றி கூற நல்லதொரு சமயத்தை எதிர்பார்த்திருந்த எனக்குத் தமிழ்த்தாய் நல்வாய்ப்பினை அமைத்துத் தந்துள்ள இவ் வேளையில், தாய்மொழியாம் தமிழ்மொழியை எனக்களித்த இறைவனுக்கும் களம் தந்த இப்பத்திரிகைக்கும் இப்பத்திரிகையில் எனது எழுத்துகள் இடம்பெற வழிசமைத்துத் தந்த மதிப்பிற்குரிய மூத்த தமிழறிஞர் சூ.யோ. பற்றிமாகரன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்வடைகிறேன்.**

### மொழி பற்றிய கருத்துகள்

உலகில் மாந்தரினம் தோன்றிய காலம் முதல் இன்று வரை பல்லாயிரம் ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான மொழிகள் தோன்றியும் மறைந்தும் திரிபுற்றும் கிளைகளாகப் பிரிவுற்றும் வந்ததாக அறியப்படுகிறது. அது போன்றே மொழி என்றால் என்ன என்பதற்கு ஆன்றோரும் சான்றோரும் அறிவுசார் வல்லுநரும் பல விதமாகப் பல்வேறுபட்ட விளக்கங்களைத் தந்துள்ளார்கள். சான்றோர் பலரின் அறிவார்ந்த விளக்கங்கள் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, பூமியில் உள்ள உயிரினங்களுள் விலங்கின வகையைச் சார்ந்த மாந்தவினம் தாம் தமக்குள் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்காகப் பயன்படுத்திய ஊடகங்களுள் ஒலி, சைகை, குறியீடுகள் அல்லது அடையாளங்கள் போன்றன குறிப்பிடத்தக்கவையாக உள்ளன. இவற்றுள் ஒலி வடிவின் இணைவினாற் பேச்சும் அந்த ஒலிக்குக் கொடுத்த வரி வடிவான எழுத்துகளின் தொகுப்பினால் ஏனைய எழுத்தாக்கங்களும் உருவாகின எனக் கருத முடியும். இதுவே மொழியாக உலா வருகிறது எனலாம்.



தமிழர்தம் பண்பாட்டில் தமக்குரித்தான அல்லது தமக்குச் சொந்தமான சொத்துகளாகக் கருதுபவற்றைத் தாயின் பெயரால் அழைக்கும் வழக்கம் உள்ளது. எடுத்துக்காட்டாக தாய்மண், தாய்வீடு, தாய்நாடு போன்றவற்றைக் குறிப்பிடலாம். அந்த வகையில் நிகரிலாச் செல்வமான மொழியும் தாய்மொழியென்றே வழங்கப்பட்டது. இன்னுமொரு புறம் பார்த்தால் தமிழ்த் தாய் என்று மொழியைத் தாயாகப் பார்க்கும் பண்பு கொண்டவர்கள் தமிழர் எனலாம்.

அவ்வாறே தாய்மொழி பற்றியும் பலவிதமான கருத்துகளை முன்வைக்கின்றனர் காலவோட்டத்திற்கமைய இதற்கான விளக்கங்கள், வரையறைகள் போன்றன மாற்ற மடைவதுடன் மாற்றத்திற்கான தேவைகளும் உருவாகிய வண்ணமே உள்ளன. மக்கள் தத்தம் தாய்நாடுகளில் வாழ்ந்த காலத்தே ஒருவருக்கு ஒரு மொழியே தாய்மொழியானது. ஆனால் குடியேற்றங்கள், உலக மயமாக்கல் முதலான காரணங்களினால் உலகம் சுருங்கி ஓர் ஊர் போலாகிவிட்ட




இன்றைய சூழ்நிலையில் தாய்மொழியென ஓர் மொழியினைக் கொள்வது மிகவும் சிரமமாக உள்ளது. புலம்பெயர் தேசங்களிலோ அன்றித் தாய்நாட்டிலோ வாழும் இளைய சமுதாயம் வேறுபட்ட சூழல்களையும் பன்மொழிக் கல்வி, கலாசாரத்தையும் சந்திக்க வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். அவர்களது நிலை சங்கடமானதா? அன்றேல் மகிழ்ச்சிகரமானதா? என்பது பெரியதொரு கேள்விக்குறியாகவே உள்ளது. அத்தோடு இந்நிலையைச் சரிசெய்ய வேண்டிய பொறுப்பும் அவரவர் கைகளிலேயே உள்ளது. இந்த நிலையில் அவர்களுக்குத் தாய்மொழி எது? எனும் கேள்வி எழுகின்றது. தாயின் மொழியா? தந்தையின் மொழியா?வாழிட மொழியா? கல்வி கற்கும் மொழியா? அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தாய்மொழிகளா? என்னும் குழப்ப நிலை உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் புலம்பெயர் தேசங்களில் எம் தமிழ்ச் சமூகம் தாய்மொழி பேண என்ன வழிவகைகளைக் கையாளப்போகிறது? எவ்வாறு இக்கட்டான இச் சூழ்நிலையைக் கடந்து வரப்போகிறது? தாய்மொழி காத்து தரணியில் நிலைபெறச்செய்ய வேண்டிய கடப்பாடு தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருக்கும் உண்டல்லவா? இதற்காக நாம் என்ன முயற்சிகளை மேற்கொள்ளப்போகிறோம்? ஆம் இவை அனைத்திற்கும் விடை காண வேண்டியதும் தீர்வு காண வேண்டியதும் நம் ஒவ்வொருவரதும் கடமையாக உள்ளது.

### புலம்பெயர்தேசத் தமிழரும் தாய்மொழியும்

தாய்நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்து மேற்குலக நாடுகளில் வாழ்கின்ற நாம் எமது தாய்மொழிப் பற்றினை விட்டுவிடவில்லை என்பதே உண்மை. ஆயினும் எமது பிள்ளைகள் சூழலுக்கேற்ப தமது மொழியினைத் தேர்வுசெய்து கற்கவும் கதைக்கவும் வேண்டிய கட்டாயம் உள்ளது. வீடுகளில் தாய்மொழியும் வெளியே வேற்று மொழியும் அகத்தியமாய் அமைகிறது. எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே' என்பது குணத்திற்கு மட்டுமன்றி அவர்கள் தம் வாழ்விற் புரியும் அத்தனை செயல்களுக்கும்



கடைப்பிடிக்கும் கொள்கைகளுக்கும் கூடப் பொருத்தமுடையதாகவே அமைகிறது. பிள்ளைகளின் எதிர்காலம் பெரியோரின் கைகளிலேயே தங்கியுள்ளது. எதிர்கால சந்ததியினரின் வாழ்வு செழிப்புற வேண்டும் என்பதற்காகப் பெற்றோரும் பெரியோரும் எவ்வாறு சொத்துகளைச் சேர்த்து வைக்கிறார்களோ அவ்வாறேஅவர்களின் வாழ்க்கைக் கட்டமைப்பு மரபு சார்ந்ததாகவும் பண்பாடு கலாசாரம் சார்ந்ததாகவும் தாய்மொழியோடு இயைந்து இணைந்ததாகவும் அமைய வழிவகை செய்யவேண்டியதுகூடப் பெரியவர்களுடைய கடமையேயாகும். பிள்ளைகளின் எதிர்காலம், எதிர்கால சந்ததியினரின் வாழ்வியல் முறைமை முதலியவற்றைச் சிறந்த வகையில் கட்டமைக்கப் பெரியவர்களே அத்திவாரம் இடவேண்டும். நாகரிகம் என்பது இடத்திற்கிடம் காலத்திற்குக் காலம் மாற்றமுறும் தன்மை கொண்டதாயினும் அந்தந்த இனத்தவரின் தனித்தன்மை பேணப்பட வேண்டியது அகத்தியம். இவ்வுலகில் பல்வேறுபட்ட இனங்களும் மதங்களும் மொழிகளும் காணப்படுகின்ற போதிலும் ஒவ்வொருவரும் தத்தமக்கு ஏற்ற வகையில் வாழ்க்கை முறையினை அமைத்து மரபு மாறாது வாழ்வது இயல்பு. அவ்வாறே எங்கு புலம்பெயர்ந்து சென்றாலும் அங்கும் தமது மரபினைப் பின்பற்றி வாழும் தன்மையே பெரிதும் காணப்படுகிறது. புலம்பெயர் தேசங்களில் வாழும் மக்களில் ஒருசாரார் உணவு, உடை, வாழ்க்கை முறை, வழிபாட்டு முறைமை போன்றவற்றை மாற்றி அமைத்துக்கொண்ட போதிலும் பலர் அவற்றினின்றும் மாறாத தன்மையினைக் கண்கூடாகக் காணமுடிகிறது.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# தொடரும் வேலையில்லாப் பட்டதாரிகளின் போராட்டம்




ஹஸ்பர் ஏ ஹலீம்

வடக்கு - கிழக்கில் காணி மீட்புப் போராட்டங்களும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் பதிலுரைக்க வலியுறுத்தும் போராட்டங்களும் இடைவெளி ஏதுமின்றி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.



இந்தப் போராட்டங்களுக்கு சமாந்தரமாக அரச துறைகளில் வேலை கோரும், வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டங்களும் தொடர்ந்து வருகின்றன. அவை, குறிப்பிட்டளவு கவனத்தையும் பெற்றிருக்கின்றன.

வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டங்கள் நாடு பூராகவும் இடம்பெறுகின்றன எனவே தான் வடக்கு கிழக்குக்கு அந்தப் போராட்டங்கள் புதியவை அல்ல. அது எதிர்காலத்திலும் தொடரத்தான் போகின்றது. எனினும், வடக்கு - கிழக்கில் கடந்த காலத்தில் வேலையற்ற பட்டதாரிகள் வேலை கோரிப் போராடியமை குறைவு.

இருந்த போதிலும் மாறி மாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் இது தொடராக எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. கடந்த 15 வருடம் போராட்டங்களாகவும் ஆர்ப்பாட்டமாகவும்வேலையற்றபட்டதாரிகள்வீதியில்இறங்கியுள்ளனர். தற்போது ஆட்சி அதிகாரத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியதை போன்று அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என வடக்கு கிழக்கு பட்டதாரிகள் ஒன்றியத்தினர் பல்வேறுபட்ட சந்திப்புகளின் போது வலியுறுத்தியுள்ளனர்.



வடக்கு கிழக்கில் பல போராட்டங்கள் நடை பெற்று வருகின்றன. குறிப்பாக அண்மையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ததுடன் அங்கு பல நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தார். இதன் போது ஒரு கட்டமாக யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்துக்கு வருகை தந்தபோது வேலையற்ற பட்டதாரிகள் குறித்த மாவட்ட செயலகத்தின் முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டு, ஜனாதிபதியை சந்திக்க நேரம் கேட்ட போதும் அதனை மறுத்து அவர் நிராகரித்தார். தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை வழங்கி இளைஞர் சமூகத்தை ஏமாற்றும் இந்த அரசாங்கத்தை எவ்வாறு நம்புவது என்ற கேள்வி மக்கள் மனதில் எழுந்துள்ளது.



கிழக்கு மாகாணத்தில் 5322 வேலையற்ற பட்டதாரிகள் உள்ளதாக கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் தெரிவித்துள்ளது அது போன்று வடக்கில் சுமார் 6200 பட்டதாரிகள் உள்ளதாக வடக்கு மாகாண ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது குறித்து திருகோணமலை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் ஒன்றிய செயலாளர் ஏ.ஆர்.எம்.புசூளி தெரிவிக்கையில் “ எதிர்வரும் வரவு செலவு திட்டத்தில் அரசாங்கம் கூறியதை போன்று 35000 பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்குவது தொடர்பில் அரச வர்த்தமானியில் வெளியிட வேண்டும். தீர்வு இல்லாத பட்சத்தில் பல போராட்டங்களை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுப்போம். அரசாங்கம் சரியான தீர்வினை முன்வைக்க வேண்டும் “ என்றார்.

வடக்கு கிழக்கில் உள்ள பட்டதாரிகள் அரச பல்கலைக்கழகங்களை அதிகமாக நம்பி சென்று சுமாராக நான்கு வருடங்கள், மூன்று வருடங்கள் விசேட பட்டம் என பூர்த்தி செய்து வெளியாகி வருகின்றனர். இந்த நிலையில், அரச துறை நியமனங்களை போட்டிப் பரீட்சை இன்றி பொதுவான நியமனங்களை எதிர்பார்க்கின்ற போதும் உடணடியான தீர்வு கிடைப்பதில்லை. வேவை வாய்ப்புக்காக விண்ணப்பம் கோரும் போது வயதெல்லை 35 ஆக காணப்படுகிறது இதனை தாண்டினால் நியமனங்களை பெற முடியாது.



இது குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் பேராசியர் ஜயந்த லால் ரட்ணசேகரவை சந்தித்து பல நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து மஹஜர் ஒன்றினையும் கிழக்கு மாகாண பட்டதாரிகள் ஒன்றியத்தினர் வழங்கியுள்ளனர்.



கிழக்கு மாகாணத்தில் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், சமூக சேவைகள் உத்தியோகத்தர்களுக்கான பல வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதும் விண்ணப்பம் கோரப்பட்டு பரீட்சை இடம் பெறவில்லை. இது போன்று ஆசிரியர்களுக்கான பல வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆனாலும் வெற்றிடங்களை நிரப்ப ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இருந்த போதிலும் பட்டதாரிகளின் கோரிக்கைகளாக பரீட்சை இன்றி பொது நியமனங்களை வழங்க வேண்டும் என தெரிவித்து கிழக்கு மாகாண ஆளுனர் செயலகம் முன்பாக கடந்த வாரம் பட்டதாரிகள் ஒன்றியத்தால்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# பெருந்தோட்டக் காணிகளை இலக்குவைத்து தொடரும் அபகரிப்பு!

துரைசாமி நடராஜா

இலங்கையின் பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்துறை எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தொழில் பாதுகாப்பும் கேள்விக்குறியாகி வருகின்றது. இதனால் சில தொழிலாளர்கள் உயிரிழக்கும் அல்லது நிரந்தர அங்கவீனர்களாகும் நிலையும் மேலோங்கி வருகின்றது. இந்நிலையில் பெருந்தோட்ட தேயிலை தொழிற்துறை எதிர்கொள்ளும் சவால்களை நிவர்த்தி செய்து இத் தொழிற்துறையின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

**தொலஸ்பாகே பிரதேசம்**



1824 ம் ஆண்டு சீனாவில் இருந்தும் 1839 ம் ஆண்டு அசாமில் இருந்தும் தேயிலை விதைகள் கொண்டு வரப்பட்டு இலங்கையின் தாவரப் பூங்காவில் பரீட்சார்த்தமாக பயிரிடப்பட்டதாக தகவல்கள் வலியுறுத்துகின்றன. ஆனாலும் இலங்கையில் முதன்முதலாக தேயிலைப் பயிர்ச்செய்கைக்கென காணியை அடையாளப்படுத்தியவர்கள் சொலமன் மற்றும் கெப்ரியல் டி வோம்ஸ் சகோதரர்களாவர். இவர்கள் இறம்பொடை பகுதியில் உள்ள லபுக்கலை தோட்டத்தில் சீனாவில் இருந்து கொண்டு வரப்பட்ட தேயிலையைப் பயிரிட்டனர். இதே காலப் பகுதியில் சீன மற்றும் அசாமில் இருந்து கொண்டு வரப்பட்ட தேயிலை விதைகள் தொலஸ்பாகே, பென்யன்லேன் தோட்டத்திலும், ஹேவாஹெட்டைக்கு அருகிலுள்ள லூல்கந்துர தோட்டத்திலும் நாட்டப்பட்டன. 1873 இல் 113 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும்,1878 இல் 1902 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும் தேயிலைப் பயிர்ச் செய்கை இடம்பெற்றது. இதேவேளை 1903 இல் 153,846, 1908 இல் 158,704, 1915 இல் 165,789, 1920 இல் 163,376, 1924 இல் 169,285 ஹெக்டேயர் நிலப்பரப்பில் இலங்கையில் தேயிலை பயிர்ச்செய்கை இடம்பெற்றது.



இந்நிலையில் பெருந்தோட்டங்களை எடுத்துக்கொண்டால் 1972 மற்றும் 1975 ம் ஆண்டுகளில் காணிச்சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரை அந்நியர்களின் உடைமைகளாகவே இத்தோட்டங்கள் இருந்து வந்துள்ளன. எனினும் காணிச் சீர்திருத்த சட்டமானது தேயிலைக் காணிகளின் உடைமையில் பாரிய மாற்றங்களை கொண்டு வந்தது. பெரும்பாலான பெருந்தோட்டக் காணிகள் சுவீகரிக்கப்படுவதற்கும் இது உந்து சக்தியாக அமைந்தது. 1972 ம் ஆண்டு காணிச் சீர்திருத்த நடவடிக்கைகளைக் காட்டிலும் 1975 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட காணிச் சீர்திருத்த நடவடிக்கைகளின் போது அதிகளவான பெருந்தோட்டக் காணிகள் சுவீகரிக்கப்பட்டதாக ஜி. எச். பீரிஸ் போன்றவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதனடிப்படையில் 1972 ம் ஆண்டு தேயிலைப் பெருந்தோட்டங்களில் இருந்து 56 ஹெக்டேயர் காணிகள் அரசுடைமையாக்கப்பட்டதோடு 1975ம் ஆண்டு சீர்திருத்தத்தின் போது மேலும் 96,191 ஹெக்டேயர்கள் அரசுடைமையாக்கப்பட்டது.

**பேராசிரியர் எஸ். சந்திரபோஷ்**

பெருந்தோட்டக் காணிகளை இலக்குவைத்து அக்காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் நீண்ட காலமாகவே காய்நகர்த்தல்கள் இடம்பெற்று வருகின்றன. சமகாலத்திலும் இதன் தொடர்ச்சியினை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. அபிவிருத்தி என்னும் போர்வையில் பெருந்தோட்ட தேயிலை விளை நிலங்கள் பல சந்தர்ப்பங்களில் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சுவீகரிக்கப்பட்ட காணிகள் நிலமற்ற கிராமிய மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட சம்பவங்களும் அநேகமுள்ளன. இத்தகைய காணிகளை பெருந்தோட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கைகள் புஷ்வாணமாகின. பிரஜாவுரிமை இல்லை என்பதை காரணங்காட்டியும் இம்மக்களுக்கான காணியுரிமை முன்னதாக மறுக்கப்பட்டமை தெரிந்ததேயாகும். பெருந்தோட்ட தேயிலை விளைநிலங்கள் சுவீகரிக்கப்பட்டமையின் காரணமாக தொழிலாளர்களின் இருப்பு சிதறடிக்கப்பட்டது. இதனால் அவர்கள் அடையாளம் இழக்கும் நிலை ஏற்பட்டதுடன் அரசியல் ஆதிக்கமும் வலுவிழந்தது.

இதேவேளை தேயிலைத் தொழிற்றுறையின் சீர்கேடுகள் குறித்து பேராசிரியர் ஏ. எஸ். சந்திரபோஷ் பல்வேறு விடயங்களை குறிப்பிடுகின்றார். தோட்ட கம்பனிகளின் உற்பத்தித் திறன் மிகக் குறைவாக இருக்கின்றது. அதாவது உயர்ந்த விளைச்சலை தரும் தேயிலை பயிர்ச் செய்கையில் முதலீடு இல்லை. அடுத்ததாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருக்கின்ற காணிகளில் 30 வீதமானவை பயன்படுத் தப்படாமல் இருக்கின்றன. அதுமட்டுமன்றி இன்னுமொரு முக்கிய சவாலாக பெருமளவு தொழிலாளர்கள் நிரந்தர தொழிலாளர்களாக அன்றி தற்காலிக தொழிலாளர்களாக மாற்றப்பட்டுள்ளனர். குறைந்த வயதிலேயே அவர்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. எனவே அவர்களுக்கு இந்த துறையிலான நாட்டம் குறைகின்றது. சுமார் 70 வீதமானவர்கள் தற்போது தற்காலிக தொழிலாளர்களாகவே மாறி இருக்கின்றனர். எனவே அவர்களிடம் தொழில் மீதான பற்று குறைவாகவே இருக்கின்றது. இதனால் தோட்டங்கள் சீர்குலைகின்றன. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும் என்று பேராசிரியர் சந்திரபோஷ் குறிப்பிடுகின்றார்.

**கொரோனா காலப்பகுதி**

இதேவேளை தேயிலையின் உற்பத்திச் செலவு அதிகரித்து வருவதனால் தொழிலாளர்களுக்கு கொடுப்பனவை வழங்குவதில் தாம் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்வதாகவும் கம்பனியினரின் தரப்பில் ஏற்கனவே கருத்துக்கள் பலவும் முன்வைக்கப்பட்டிருந்தன. அத்தோடு தோட்டத்துறையில் வேலையாட்களின் பற்றாக்குறை மற்றும் ஏனைய தொழில்களை தொழிலாளர்கள் நாடிச் செல்லும் நிலைமை தொடர்பிலும் கம்பனியினர் கருத்து வெளியிட்டிருந்தனர். பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள். இந்நிலையில் பல்வேறு சிரமங்களை தாம் எதிர்கொண்ட போதும் இவர்களின் நலன் கருதி தம்மாலான உச்சகட்ட சேவையினை வழங்கி வருவதாகவும் கம்பனியினர் மேலும் தெரிவிக்கின்றனர். கொரோனா காலப்பகுதியில் தொழிலாளர்களுக்கு தாம் வழங்கிய சலுகைகளையும், சேவைகளையும் அவர்கள் நினைவுபடுத்துகின்றனர்.



இதேவேளை ஜனவசம, அரச பெருந்தோட்ட யாக்கம், எல்கடுவ பிளான்டேஷன் கம்பனி தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 7000 - 10,000 தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டியுள்ள சட்டரீதியான கொடுப்பனவுகளான ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் சேவைகாலப் பணம் என்பன பல மில்லியன் ரூபாய்கள் வழங்கப்படாதுள்ளமை ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளதாக கடந்தகால தகவல்கள் வலியுறுத்தின. இதற்கேற்ப இத் தொழிலாளர்களுக்கு சுமார் 1800 மில்லியன்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# யுஎஸ்எயிட் (USAID) அமைப்பின் இடைநிறுத்தமும் அதனால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகளும்

**பகுதி 1**

தமிழில்: ஜெயந்திரன்

அமெரிக்க அரசின் முன்னணி நிறுவனமான, பன்னாட்டு அபிவிருத்திக்கான உதவித்திட்டத்தை பல பில்லியன் டொலர்களுக்குச் சொந்தக்காரரான, எலான் மஸ்க் *(Elan Musk)* திடீரென இழுத்து மூடியதன் காரணமாக, உலகம் முழுவதுமே உயிர்காக்கும் மருந்துகளின் விநியோகம் தடுக்கப்பட்டிருக்கின்றது. பல நாடுகளில் சிறுவர், சிறுமியர் உணவின்றித் தவிக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதுமட்டுமன்றி ஊட்டச்சத்து தொடர்பான பல உதவித்திட்டங்களும் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன.

உலக அபிவிருத்திக்கான இந்த உதவி அமைப்பின் நிதி அத்தனையையும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் முடக்கியதன் காரணமாக, பல நாடுகளில் குழப்பங்களைக் காண முடிந்தது. இதனால் பல நாடுகளில் நோயின் தாக்கம் கணிசமான அளவு அதிகரிக்கும் என்றும், பஞ்சம், பட்டினி உருவாகும் அபாயம் தோன்றியிருக்கிறது என்றும், குடும்பக்கட்டுப்பாடு, பெண்கள் மற்றும் சிறுமிகளின் கல்வி போன்ற துறைகளில் மிகவும் கடுமையான பாதிப்பு ஏற்படும் என்றும் உதவி நிறுவனங்கள் எச்சரித்திருக்கின்றன. கடந்த 2023ம் ஆண்டில் 40 பில்லியன்கள் டொலர்களுக்கும் அதிகமான உதவித்திட்டங்களை மேற்படி நிறுவனம் முன்னெடுத்திருந்தது.

உலகம் முழுவதுமே ஏராளமான நிறுவனங்கள் தமது செயற்பாடுகளைத் தொடர முடியாதிருக்கும் அதே வேளை, பல நிறுவனங்கள் தமது பணியாளர்கள் பலரை இடைநிறுத்தியிருக்கின்றன.

குறிப்பிட்ட நிறுவனத்தின் நிதியை 90 நாட்களுக்கு நிறுத்தி வைக்குமாறு, அதிபர் ட்ரம்ப் விடுத்த கட்டளையின் காரணமாக, கர்ப்பிணிக் காலத்திலும், பிரசவத்தை எதிர்கொள்ளும் காலத்திலும் ஏற்படக்கூடிய சிக்கல்களின் காரணமாக, பல்லாயிரக்கணக்கான பெண்களும் சிறுமிகளும் இறக்கும் ஆபத்து உருவாகியிருக்கின்றது என்றும் ஆய்வுகள் பல சுட்டிக்காட்டியிருக்கின்றன.




பன்னாட்டு அபிவிருத்திக்கான அமெரிக்க உதவித்திட்டத்தை ஒரு ‘குற்றவியல் அமைப்பு’ என்ற சித்தரித்த எலான் மஸ்க்கிடம், அமெரிக்க அரசின் இந்த முன்னணி நிறுவனத்தின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டிருக்கிறது.

உலகளாவிய உதவிச் செயற்பாடுகளைப் பொறுத்தவரையில், அமெரிக்க அரசின் இந்த முடிவின் தாக்கம், மிகவும் ஆழமானதாகவும் உடனடித்தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருந்தது.

உலகளாவிய வகையில் மனிதாயச் செயற்பாடுகளில் செலவிடப்படும் ஒவ்வொரு 10 டொலரிலும் 4 டொலர்கள் இதுவரை அமெரிக்க உதவித்திட்டத்திலிருந்தே கிடைத்துவந்திருக்கிறது.

“பன்னாட்டு மனிதநேயச் செயற்பாடுகளுக்கான உதவிச் செயற்பாடுகள் முற்றாகச் செயலிழக்கக்கூடிய நிலையே தற்போது காணப்படுகிறது” என்று யுஎஸ்எய்ட் அமைப்பின் மேனாள் உயர்மட்ட அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.



உலகில் தற்போது மிக மோசமான மனிதாய நெருக்கடியைச் சந்திக்கும் நாடாகக் கருதப்படும் சூடானிலும் அத்துடன் கொங்கோ சனநாயகக் குடியரசிலும் மிகவும் அவசியமான மருந்துகள் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்ற களஞ்சிய நிலையங்கள் திடீரெனக் கைவிடப்பட்டிருக்கின்றன. மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் அண்மைக்காலங்களில் ஏற்பட்டுவரும் மோதல்கள் அப்பிரதேசத்தை இன்னும் சிக்கலான நிலைக்குத் தள்ளியிருக்கிறது.

“அமெரிக்காவின் இந்த உதவி அமைப்பை ஒட்டுமொத்தமாக இல்லாமல் செய்யவேண்டும்” என்று எலான் மஸ்க் அறிவித்ததைத் தொடர்ந்து, உணவுக்களஞ்சியங்களில் சேமிக்கப்பட்டிருந்த உணவு கைவிடப்பட்டுப் பழுதடைந்திருப்பதன் காரணத்தினால், ஆபிரிக்காவைப் பொறுத்த வரையில், பாடசாலையில் கொடுக்கப்படும் உணவில் மட்டும் தங்கியிருக்கும் பல்லாயிரக்கணக்கான சிறுவர், சிறுமியரின் ஊட்டச்சத்து கேள்விக்குறியாகியிருக்கிறது.




கொங்கோ சனநாயகக் குடியரசிலும் சூடானிலும், மருத்துவ உதவிகள் அனைத்துமே களஞ்சியங்களில் முடக்கப்பட்டிருக்கின்றன என்று அமெரிக்க உதவித்திட்டத்துடன் இணைந்து பணியாற்றிய பணியாளர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

அமெரிக்க பன்னாட்டு அபிவிருத்தி உதவித்திட்ட அமைப்பு மூடப்பட்டது தொடர்பாக வெளியில் எதையும் பேசவேண்டாம் என அமெரிக்காவின் மனிதாயப் பிரிவில் பணியாற்றும் அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டிருப்பதன் பின்னணியில், இந்த ஊடகத்துக்கு கருத்துத் தெரிவித்த அதிகாரி தனது பெயரைக் குறிப்பிட வேண்டாம் என ஊடக வியலாளரைக் கேட்டுக்கொண்டார். தமது எதிர்கால நிதியுதவிகள் பாதிக்கப்படலாம் எனக்கருதியதன் காரணமாக, பலர் தமது செவ்விகள் ஒலிப்பதிவு செய்யப்படுவதை விரும்பவில்லை.

முடிவுக்குக் கொண்டுவர நிர்ப்பந்திக்கப்பட்ட செயற்றிட்டங்களில், நேபாளத்தில் சிறுமியருக்கான ஒரு கல்வித்திட்டமும் உள்ளடங்கும். இதன் காரணமாக குறைந்த வயதுத் திருமணம், மற்றும் சட்டவிரோதமாக மக்கள் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குக் கொண்டுசெல்லப்படும் ஆபத்து *(trafficking)* என்பன இப்போது அதிகரித்திருக்கிறது.



“இவ்வாறான திட்டங்களுக்கான நிதி அனைத்துமே முடக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமன்றி பல தவறான செய்திகளும் பரவிக்கொண்டிருக்கின்றன. தெளிவான அறிவுறுத்தல்கள் இல்லாமலிருக்கும் காரணத்தினால், அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் முடிவுகள் எடுக்க முடியாமல் திண்டாடுகிறார்கள்” என்று மனிதாயச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

அதிகமான சிறுவர்களின் இறப்புக்குக் காரணமாக இருக்கின்ற வாந்திபேதி நோய் தொடர்பான ஆய்வுகளை ஒருங்கிணைக்கின்ற வங்காளதேசத்திலுள்ள வாந்திபேதி நோய் ஆய்வுக்கான பன்னாட்டு மையம், மலேரியா நோயுடன் தொடர்புபட்டு, உலகில் அதிகம் மதிக்கப்படும் விஞ்ஞானிகளை இடைநிறுத்த வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியிருக்கிறது.

ஆபிரிக்காவில், உகாண்டாவில் முன்னெடுக்கப்பட்டுவந்த மலேரியா நோயைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டங்கள் இந்த நிதி முடக்கத்தின் காரணமாக மோசமான முடிவுகளை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. சமூகத்துக்கு வழங்கப்பட்டு வந்த பல முக்கியமான திட்டங்கள் பல மூடப்பட்டிருக்கின்றன.

ஆபிரிக்காவின் தென்பகுதியில், அதாவது மாலாவியில் *(Malawi)*, வெளிநாட்டு நிதி வழங்குநர்களில் தங்கியிருக்கும் உயிர்காப்புத் திட்டங்கள் பல தொடரப்பட முடியாத சூழல் இருப்பதனால் முழுநாட்டின் பொருண்மியமுமே

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

**பெருந்தோட்டக் ... தொடர்ச்சி ...**

ரூபாய்கள் வழங்கப்பட வேண்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். வாழ்நாள் முழுவதும் தேயிலைக்கே அர்ப்பணித்த தொழிலாளர்கள் இறுதிக் காலத்தில் தமக்கு சேரவேண்டிய கொடுப்பனவுகளை உரியவாறு பெற்றுக் கொள்ள முடியாது பல படிகளை ஏறி இறங்குவது கொடுமையிலும் கொடுமையாகும்.

## கங்காணிமார் ஆதிக்கம்



இந்திய வம்சாவளி மக்களை இலங்கைக்கு அழைத்து வந்த ஆரம்ப காலகட்டத்தில் தோட்டத்துரைமார் தொழிலாளரை அடிமைகளாக வைத்திருப்பதற்கு கங்காணி முறையை பயன்படுத்தினர். கங்காணி என்பவர் தொழிலாளரை 'கண்காணிப்பவர்'. அதாவது எவ்வளவு கேவலமாக நடத்தினாலும் தொழிலாளர்கள் தோட்டத்தை விட்டு ஓடிவிடாமல் கண்காணிப்பவரே கங்காணி. தொழிலாளரை புதிதாக தோட்டங்களுக்கு கொண்டு வருவதற்கும் அவர்களை தொடர்ந்து தோட்டங்களில் தங்க வைப்பதற்கும் இந்த கங்காணி முறை காலனித்துவ வாதிகளுக்கு மிகவும் உதவியாக இருந்ததாக பேராசிரியர் தை. தனராஜ் சுட்டிக்காட்டுகின்றார். இதேவேளை 'தோட்டத்துக்கு வந்து சேர்ந்த தொழிலாளர் கடன்களுடனேயே தமது வாழ்க்கையை ஆரம்பித்தனர். தோட்டத் தொழிலாளர் கடனிலேயே பிறந்து கடனிலேயே வாழ்ந்து கடனிலேயே இறந்தார்கள்' என்று 1932 இல் தொழில் அதிகாரியான டி. ரெய்ட் (T. Reid) குறிப்பிடுகின்றார். இந்த சோகம் இன்னும் தொழிலாளர் வாழ்வில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.' உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லாத தொழிலாளர்களின் வாழ்வில் கடன்தொல்லை இப்போதும் ஆக்கிரமித்திருக்கின்றது.

இதேவேளை பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில்சார் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் தொழிலாளர்களுக்கான நட்ட ஈடு பற்றிய சட்டங்கள் பலவும் காணப்படுகின்றன. 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம், 1934 ஆம் ஆண்டின் 19 ம் இலக்க தொழிலாளர் நட்ட ஈட்டு கட்டளைச் சட்டம், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம், 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டம் எனப்பலவும் இதில் உள்ளடங்கும். என்னதான் எத்தனை சட்டங்கள் இருந்தபோதும் பெருந்தோட்டத் தொழிற்றுறையில் தொழில் புரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு என்பது கேள்விக்குரிய ஒன்றாகவே இருந்து வருகின்றது.

## குளவித் தாக்குதலில் பலி

பாதுகாப்பான உடை, உபகரணங்கள், முகக் கவசம் எனப்பலவும் இதில் உள்ளடங்கும். எனினும் இவ்விடயத்தில் திருப்தியடைய முடியாதுள்ளது. அத்தோடு பெருந்தோட்ட தேயிலை மலைகளில் தற்போது குளவிக் கூடுகள் அதிகமாக காணப்படுகின்றன. இதனிடையே தொழில் நிலையில் பல தொழிலாளர்கள் குளவிக் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இதைவிட கொடுமையான ஒரு சம்பவம் கடந்த வாரம் இலங்கையின் கண்டி மாவட்டத்தின் புசல்லாவை, பிளக்போரஸ்ட் தோட்டத்தில் பதிவாகியுள்ளது. இத்தோட்டத்தைச் சேர்ந்த 8 வயதுடைய பாடசாலை மாணவன் குளவித் தாக்குதலுக்கு உள்ளாகி பலியானமை இப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி இருந்தது. இதேவேளை கடந்த வாரம் இதே பகுதியில் கலுகல்ல தோட்டத்தைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரும் குளவிக் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்திருந்தார்.



தேயிலை மலைகளில் குளவித் தாக்குதல்கள் அடிக்கடி இடம்பெற்ற வரும் நிலையில் தொழிலாளர்கள் மிகுந்த அச்சத்துடனேயே தொழில் புரிந்து வருகின்றனர். இந்நிலையில் குளவிகளை விரட்டியடித்து, குளவித் தாக்குதல்களில் இருந்து அப்பாவித் தொழிலாளர்களை பாதுகாக்க தோட்ட நிர்வாகமும், கம்பனியினரும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

1938 காலப்பகுதியில் நாட்டின் மொத்த ஏற்றுமதி உழைப்பில் பத்தில் ஒன்பது பங்கு பெருந்தோட்டத்துறை ஏற்றுமதிகளில் இருந்தே பெறப்பட்டது. தேயிலை ஏற்றுமதி இதில் முதன்மை வகித்தது. இரண்டாம் உலகப் போரின் பின்னரும் இதில் அடிப்படையான மாற்றங்கள் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும் கடந்த நான்கு தசாப்தங்களில் பல்வேறு காரணங்களால் இத்துறையின் பொருளாதாரச் சார்பு முக்கியத்துவத்தில் தொடர்ச்சியான வீழ்ச்சி நிலை ஏற்பட்டு வருகின்றது. இதற்கான பல்வேறு காரணங்களை பேராசிரியர் சின்னத்தம்பி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கேற்ப1977 இல் அறிமுகம் செய்யப்பட்ட ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சிக் கொள்கைகளின் கீழ் ஏற்றுமதிகள் பன்முகப்படுத்தப்பட்டதும், ஏனைய ஏற்றுமதித் துறைகள் துரிதமாக வளர்ச்சியடைந்து வந்ததும், பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்தியிலும் சந்தை விலைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சியுமே இத்துறையின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இனங்காணப்பட்டுள்ளது. பாதகமான கால நிலை, காணிச் சீர்திருத்தத்திற்கு முன்னரும் பின்னரும் தேயிலைக் காணிகள் மற்றும் தொழிற்சாலைகளின் முறையான பராமரிப்பு கைவிடப்பட்டமை, மீள்நடுகை, வெற்றிடங்களை நிரப்புதல், பசளை உபயோகம், மண் பாதுகாப்பு நடவடிக்கைகள், தேயிலை பதனிடல் போன்றவற்றின் மீதான முதலீடுகள் வீழ்ச்சியுற்றமை போன்றனவும் பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறையின் வீழ்ச்சிக்கு அடிகோலின.

## காத்திரமான முன்னெடுப்பு

இலங்கையின் பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறை நீண்ட காலமாகவே பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றது. இத்துறையின் அபிவிருத்தியில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தப் போவதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடிக்கடி வலியுறுத்தி வந்தார். இதைப்போன்றே பெருந்தோட்டத் தேயிலைத் தொழிற்றுறையை துரிதமாக அபிவிருத்தி செய்யப் போவதாக முன்னைய ஆட்சியாளர்களும் கருத்து தெரிவித்து வந்தனர். எனினும் இவையெல்லாம் ஏட்டுச் சுரைக்காயான நிலையில் தோட்டத்தினதும், தொழிலாளர்களினதும் சவால்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் புதிதாக ஆட்சிபீடமேறியுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பெருந்தோட்டத் தொழிற்றுறை மற்றும் தொழிலாளிகளின் நலன் கருதி காத்திரமான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என்பதே சகலரினதும் எதிர்பார்ப்பாகும். இது சாத்தியமாகுமா? என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.

• • •

**தொடர்ந்து... தொடர்ச்சி ...**

பயன் படுத்தப்பட்டு வருகின்றன. மிக உயர் தொழில்நுட்பம் கொண்ட இந்த விமானத்தின் பெறுமதி 100 மில்லியன் டொலர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

எதிரிகளின் இலத்திரனியல் சமிக்கைகளை குழப்புவதன் மூலம் அமெரிக்க படையினரின் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கத்துடன் இந்த விமானங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒக்டோபர் மாதமும் அமெரிக்காவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இத்தகைய விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியிருந்தது. அதன் பின்னர் கடந்த வருடம் செங்கடல் பகுதியில் குதீஸ் அமைப்பினர் மீது தாக்குதல் நடத்தச் சென்ற சமயம் மற்றுமொரு எப்-18 விமானம் வீழ்ந்து நொருங்கியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.



**மக்களின் விடுத ... தொடர்ச்சி ...**

ஒரு எழுத்தாளர் என்பதுடன், அவரின் மாமியாரான சாவித்திரி அத்துவிதாநந்தனும் மிகச் சிறந்த எழுத்தாளர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அமரர் சு.இராஜநாயகன் மாஸ்டர் இலங்கையின் மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர்களில் ஒருவர். மறுமலர்ச்சி இதழின் எழுத்தாளர் பரம்பரைக்குரிய வர்.இராஜநாயகனின் 'பிரியாணி' என்ற நாவல் ஈழத்து நாவல் இலக்கிய வரலாற்றில் பேசப்படும் ஒன்று.

சாவித்திரியம்மாவுடன் நான் கதைக் கும் சமயங்கள் எல்லாம் பாரதி அண்ணா தொடர் பாகவே அவர் அதிகம் கதைப்பதுண்டு. பாரதி அண்ணாவை நாம் இழந்ததையும் அவர் தான் எனக்கு முதலில் தெரியப்படுத்தியிருந்தார்.

பாரதி அண்ணாவின் சகோதரர் பரதன் அவர்களும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடகப் பிரிவான நிதர்சனம் தொலைக்காட்சியில் தனது ஊடக களப்பணியை ஆற்றியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. மூன்று வருடங்களுக்கு முன்னர் அவர் காலமாகியபோதும் பாரதி அண்ணாவுடன் கதைத்திருந்தேன்.

அதாவது அவரின் குடும்பத்தில் உள்ள பெரும்பாலானவர்கள் ஏதோ ஒருவகையில் எமது விடுதலைப்போரிலும், மக்களின் விடுதலையிலும் பங்கெடுத்தவர்களாகவே இருக்கின்றனர். தமது வாழ்நாளை எமது மக்களின் விடுதலைக்காக அர்ப்பணித்தவர்கள்.

ஆயிரம் துப்பாக்கிகளால் முடியாத காரியத்தை சில சமயங்களில் ஒரு பேனா நிகழ்த்தி விடுவதுண்டு, அதற்கு சிறந்த அண்மைய உதாரணம் காசாவில் இடம்பெற்ற போராகும். 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஹமாஸ் நிகழ்த்திய தாக்குதல் இஸ்ரேலிய அரசுக்கு ஏற்படுத்திய சேதத்தைவிட அல்ஜசீரா என்ற ஊடகம் இஸ்ரேலுக்கு அனைத்துலக மட்டத்தில் ஏற்படுத்தி சேதங்கள் மிகப்பெரியது. அதற்கு விலையாக அது பல ஊடகவியலாளர்களையும் இழந்துள்ளது.

பாரதி அண்ணாவின் பணியும் அவ்வாறானது தான். எமது விடுதலைப்போரின் காலத்தில் அவர் சந்தித்த துன்பங்களும் ஏராளம். 1985 ஆம் ஆண்டு செய்தி சேகரிக்கச் சென்ற சமயம் இலங்கை இராணுவத்தினரால் சாவகச்சேரியில் வைத்து கைது செய்யப்பட்டு குருநகர் படை முகாமில் தடுத்துவைக்கப்பட்டு பின்னர் வெளிவந்திருந்தார். ஈழமுரசில் பணியாற்றிய காலங்களில் யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து ஏவப்படும் எறிகணைகளுக்கு மத்தியில் ஒரு சில மின்குமிழ்களின் வெளிச்சத்தில் தான் அவர் பத்திரிகையை வடிவமைப்பதுண்டு. வடக்குக் கிழக்கு மாகாண சபை நிகழ்வு ஒன்றுக்காக இந்தியப்படையின் ஏற்பாட்டில் ஊடகர்கள் சிலர் திருமலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது மரத்துடன் பேரூந்து மோதியதால் இவரது கையில் காயம் ஏற்பட்டதுடன், ஊடகப் பணியின்போதே அவர் தனது கையையும் இழந்திருந்தது மிகவும் வருத்தமானது. எனினும் அதன் பின்னரும் அவர் தான் இறக்கும் வரையிலும் ஒரு கையுடன் தனது ஊடகப் பணியினை தொடர்ந்தே வந்திருந்தார்.

இன்று நாம் எமது இனத்தின் விடுதலையுடன் பயணித்த ஒரு தலைசிறந்த ஊடகப் போராளியை இழந்து நிற்கின்றோம். அவரின் இழப்பு என்பது தமிழ் மக்களுக்கும் இலக்கு மற்றும் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலிக் குழுமத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரும் இழப்பாகும். எனினும் நாம் சரியான பாதையில் பயணித்து அவரின் இலட்சியத்தை நிறைவேற்றுவது தான் நாம் அவருக்கு செய்யும் அஞ்சலியாகும்.

• • •

**உக்ரைனுக்கு ... தொடர்ச்சி ...**

அதிபரின் கோரிக்கையை தான் தனிப்பட்ட முறையில் தெரிவித்துள்ளதாக பெசன்ற் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தான் உக்ரைன் அதிபருடன் தொலைபேசியில் பேசியதாகவும் அதற்கு அவர் சம்மதித்துள்ளதாகவும், தனக்கு முன்னைய ஜோபைடன்அரசுஅமெரிக்கமக்களின் நிதியை தவறாக பயன்படுத்தியதாகவும், அதனை மீண்டும் அமெரிக்கா பெறமுற்படுவதாகவும் டிறம் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உடன்பாடு என்ற போர்வையில் இந்த உடன்பாடு தொடர்பான ஆவணங்களும் கைச்சாத்திடப்போவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, உக்கிரைனின் 7 றில்லியன் டொலர்கள் பெறுமதியான கனிம வளங்கள் உள்ளதாகவும், ஆனால் அவை டொனஸ் பகுதியில் தான் அதிகளவில் இருப்பதாகவும் அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன. உக்ரைனில் 2014 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றம் ஏற்பட்ட போது டொன்பாஸ், டொனஸ் பகுதிகள் சுதந்திரப் பிரகடனம் செய்திருந்தன. பின்னர் 2022 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கை மூலம் ரஸ்யா அவற்றை தன்னுடன் இணைத்துக்கொண்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

**வடக்கில் இருந்து ... தொடர்ச்சி ...**

குழுமம் பல நாடுகளில் இலஞ்ச மோசடிகளில் ஈடுபட்டிருந்ததாக அமெரிக்கா கடந்த நவம்பர் மாதம் தெரிவித்ததைத் தொடர்ந்து அதானி குழுமத்தின் திட்டங்கள் மறுபரிசீலனை செய்யப்படும் கென்யா உட்பட பல நாடுகள் என அறிவித்திருந்தன. இலங்கையும் அது தொடர்பில் கவனம் செலுத்துவதாக தெரிவித்திருந்தது.

இலங்கையின் இறைமையை தாம் மதிப்பதாகவும், எனவே தமது திட்டம் தொடர்பில் மீண்டும் அமைக்கப்பட்ட பரிந்துரைக் குழுவின் கூட்டத்தில் பங்குகொள்ளாது தாம் வெளியேறப் போவதாகவும் அதானி குழுமம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் தாயகப் பிரதேசமான வடக்கில் உள்ள மன்னார் மற்றும் பூநகரிப் பகுதிகளில் 484 மெகாவற் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஒரு பில்லியன் டொலர்கள் பெறுமதியான இந்த திட்டத்தை இலங்கையின் முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சே தலைமையிலான அரசுடன் அதானி குழுமம் 2022 ஆம் ஆண்டு மேற்கொண்டிருந்தது. அதன் பின்னரே இலங்கையில் ஏற்பட்ட போரட்டம் மூலம் கோத்தபாயா ஆட்சியில் இருந்து துரத்தப் பட்டார்.

மன்னார் மற்றும் பூநகரிப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருந்த இந்த திட்டமானது தமிழ் மக்களின் அனுமதி இன்றி மேற்கொள்ளப்பட்டதுடன், அந்த பிரதேசங்களில் உள்ள சுற்றுப்புறச்சூழல்களுக்கும் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தும் என தெரிவித்து தமிழ் மக்கள் அதற்கு எதிராக போரடிவந்ததுடன், வழக்குகளும் பதிவுசெய்யப்பட்டிருந்தன.







## இலங்கை சுதந்திர ... தொடர்ச்சி ...

மலையகத்தவர்கள் தங்கள் பங்களிப்பை செய்துள்ளார்கள் என்பது மறு தலிக்க முடியாத வரலாறு.

இருபதாம் நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்தில் தமிழர்கள் அரசியல் சீர்திருத்தத்துக்காக போராட ஆரம்பித்தனர் என்று வரலாறு தெரிவிக்கிறது. உதாரணமாக 19 ஆம் நூற்றாண்டின் இறுதித்தசாப்தங்களில் தமிழ் அரசியல் அமைப்புக்களாக இந்திய தேசிய காங்கரஸ் தென்னிந்திய திராவிட இயக்கங்களும் இலங்கை யின் தமிழ் அரசியல் இயக்கங்களுக்கு வழி காட்டி வைத்ததன் நிமித்தம் இலங்கையில் சைவ பரிபா லன சபை, இந்து மகா சபை தமிழ்ச்சங்கம் என்பன சமய கலாச்சார மொழி ஆகியவற்றுக்காக உருவாக்கப்பட்டபோதிலும் அவைதமிழ்அரசியல் அபிவிருத்திகளுக்கான ஆர்வம் கொண்டவையாக ஓரளவு கவனம் செலுத்தின. இருந்தபோதிலும் இவை அரசியலில் முழுமையாக ஈடுபடவில்லை என்றே கூறவேண்டும். இருந்தபோதிலும் தமிழரின் அரசியல் சமூக முன்னேற்றத்தின் நலன் கருதி யாழ்ப்பாணச் சங்கம் (1905) உருவாக்கப்பட்டு ஏனைய தமிழ் சமூக அரசியல் அமைப்புக்களின் முன்னோடியாக இது விளங்கியது. அது போலவே வட கிழக்கிலும் மலையகத்திலும் பல சமூக அமைப்புக்கள் தோற்றம் பெற்றன.

ஏலவே சேர். பொன் அருணாசலம் சேர். பொன் இராமநாதன் போன்றோரினன் ஆதர வின் கீழ் தேசிய காங்கிரஸ் அரசியல் சார்ந்து இயங்கி வந்தபோதும் இதில் பிளவு ஏற்பட்டதைத் தொடர்ந்து தமிழர்கள் நலனை பாதுகாப்பதற்கான தமிழ் மகாஜனசபா எனும் அமைப்பை ஆரம்பித்தனர் இவ்வாறு இலங்கை சுதந்திர விடுதலையில் தமிழ் தலைவர்கள் போராடியதன் இன்னொரு முனைப்பாகவே 1895 ல் அநாகரிக தர்ம பாலா தொடங்கிய மது ஒழிப்பு இயக்கத்தை டி.எஸ். சேனநாயக்கா எப்.ஆர். சேனநாயக்கா இவர்களோடு எட்மன் ஹேவா விதாரண டி.பி ஜெயத்திலக்கா, டபிள்யு ஏ. சில்வா பியதாஸ சிறிசேன போன்றோர் மது ஒழிப்பு இயக்கங்களின் பிரதான தலைவர்களாக செயற்பட்ட அதேவேளை தேசிய சுதந்திர புருஷர்களாகவும் விளங்கினர்.

இலங்கையின் சுதந்திரத்தை தொடர்ந்து தமிழ்ப்பேசும் மக்களுக்கான சுய நிர்ணய உரிமைகளில் வட கிழக்கு தமிழர்கள், மலையக தமிழர்கள், முஸ்லீம் மக்கள் திட்டமிட்ட முறையில் ஒதுக்கப்பட்டார்கள். குறிப்பாக பிரஜாவுரிமைச் சட்டத்தை தொடர்ந்து பண்டாரநாயக்காவின் தனிச்சிங்களச்சட்டம் சிங்கள ஸ்ரீ திணிப்பு தமிழ் மொழிப்புறக்கணிப்பு என ஏற்படுத்தப்பட்ட திட்ட மிட்ட நட வடிக்கைகள் காரணமாக தமிழ் மக்கள் தேசிய சுதந்திரத்தை தம் மக்களுக்கான சுதந்திரமாக எண்ணத் தவறியது மாத்திரமல்ல இலங்கையின் சுதந்திரமென்பது தென்னிலங்கை சிங்கள மக்களுக்கான சுதந்திரம் என்ற மனப்பாங்கை கொண்டவர்களாக தங்களை கருதத் தொடங்கியதே பேரினவாதப் புறக்கணிப்பால் ஏற்பட்ட விளைவாகும்.

இதன் இரண்டம் கட்டமாக இலங்கையின் சுதந்திரத்தின் பால் தமிழர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தக்காரணமாக இருந்தவை, பண்டா செல்வா ஒப்பந்தம் மற்றும் டட்லி செல்வா ஒப்பந்தம் கிழித் தெறியப்பட்டமை. 1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரக போராட்டத்தில் தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டமை 1972 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட குடி யரசு யாப்பில் தமிழ் மக்களின் தேசிய உரிமை மறுக்கப்பட்டமை, 1973 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பல்கலைக்கழக தரப்படுத்தல், 1974 ஆம் ஆண்டு தமிழ் ஆராட்சி மகாநாட்டுக் கொலைகள். 1977, 1983 ஆம் ஆண்டு கலவரங்கள் 1978 ஆம் ஆண்டு உண்டாக்கப்பட்ட சோஷசலிச குடியரசு யாப்பு, 1978 பயங்கரவாத தடைச்சட்டம், 2009 இறுதியுத்த மனிதவுரிமை மீறல்கள் யுத்தக்குற்றம் போன்ற தொடர்ச்சியான காரணங்கள் தமிழ் மக்கள் மத்தியில் சுதந்திர தினத்துக்கான வெறுப்பையும் எதிhப்புப் போக்கையும் உருவாக்கியதன் காரணமாகவே தமிழ் மக்கள் சுதந்திர தினத்தை ஒரு பொருட்டாக மதிக்காமல் அதை ஒரு கரிநாளாகவும் எதிர்ப்பைக்காட்டும் தினமாகவும் அனுஷ்டித்து வந்திருக்கிறார்கள். என்பது இலங்கை அரசாங்கத்தாலோ அல்லது தென்னிலங்கை மக்களாலோ அறியப்படாத ஒரு விடயமல்ல.

77 ஆவது சுதந்திரத்தை வட கிழக்கிலுள்ள மக்கள் அரசியல் தலைமைகள் ஏற்றுக் கொள்ளாமையை மிக தெளிவாக தெரிந்து கொண்டாலும் அதற்கான பரிகாரங்களைக் காண இலங்கையில் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க முயற்சிகவில்லை என்பது தமிழ் மக்களால் சாட்டப்படும் குற்றச்சாட்டுக்கள் ஆகும்.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விவகாரத்தில் இலங்கை அரசாங்கங்கள் ஒரு தீர்க்கமான முடிவுக்கு இதுவரை வந்ததாக தெரியிவில்லை. ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகர்வு என்று பிடிவாதமாக இலங்கை அரசாங்கம் நிக்கிறபோது தமிழ் தலைமைகள் சமஷ்டி என்ற கோரிக்கையை கடந்த 75 வருடங்களுக்கு மேலாக கோரி வந்திருப்பதை காணுகிறோம். இந்த விவகாரத்தில் கூட இலங்கை அரசாங்கம் ஒரு திடமான முடிவை அறிவித்ததாக இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தில் சில பிரயத்தனங்கள் மேற் கொள்ளப்பட்டபோதும் அது நிறைவேறாத கனவாகவே போய்விட்டது. புதிய ஆட்சியாளர்களான தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது, தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாட்டுக்கு ஒரு புதிய அரசியல் சாசனத்தைக் கொண்டுவந்து சிறுபான்மை மக்களின் தேசிய உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படு மென வாக்குறுதி அளித்திருந்தும் பிந்திகிடைத்த செய்திகளின்படி அரசியல் அமைப்பு திருத்தப்பணிகளை விட தற்போது பொருளா தார சவால்களை எதிர் கொள்வதற்கான வேலைத் திட்டங்களுக்கே அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டியுள்ளதால் தற்போது அரசியல் அமைப்புத்திருத்தத்தை மேற் கொள்ளப் போவதில்லை எனஅறிவித்துள்ளது. கவனமாக பார்ப்போமானால் தட்டிக்கழிக்கும் மனப்பாங்கிலையே புதிய அரசாங்கமும் இருக்கிறது என்பது புரிகிறது. ஆசாரி விரும்பினாலும், பூசாரி இடங்கொடுக்கத்தயாரில்லை என்பதுபோல் ஜனாதிபதி அவர்கள் தமிழ் மக்களின் நீண்ட காலப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுமென கூறிவந்தாலும் அவரை நெறிப்படுத்துகிற அமைச்சர் அவையினர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதானிகள் இத்தகையதொரு மாற்றத்துக்கான உடன்பாட்டுக்கு வருவார்களா என்பது சந்தேகமாகவே இருக்கப்போகிறது.

அடுத்த பிரச்சனையாக பேசப்படுவது இறுதி யதத்தத்தில் மீறப்பட்ட மனித உரிமை மீறல்கள் யுத்தக்குற்றம் தொடர்பாக உரிய நீதி பெறப்படவேண்டு மென்பது இன்னொரு கோரிக்கையாக முன்வைக்கப்பட்டு வருகிறது. 2012 ஆம்ஆண்டு இலங்கைக்கு எதிராகஅமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப்பேரவையால் கொண்டு வரப்பட்ட எந்த தீர்மானத்தையும் இலங்கை அரசாங்கம் ஏற்றக் கொண்டதாகவோ அன்றி அங்கீகரித்ததாகவோ தெரியவில்லை. இது நாட்டுக்கு ஏற்படுத்தக் கூடிய நேரடி விளைவுகளை உணர்ந்துள்ளமை காரணமாகவே இலங்கை அரசாங்கம் மறுதலித்தே வருகிறது.

இத்தகைய பல்வேறு எதிர் நிலைக்காரணங்கள் தமிழ் மக்கள் சுதந்திர இலங்கையை நேசிக்காமைக்கான காரணங்களாகச் சொல்லப்பட்டாலும் இத்தீவின் சுதந்திரம் அனைத்து சமூகத்தவராலும் கொண்டாடப்படவேண்டியசூழ் நிலையை இலங்கை அரசாங்கமே உருவாக்கவேண்டும். ஜனாதிபதி அனுரா குமாரதிஸநாயக்க தனது உரையில் குறிப்பிட்டதுபோல் உண்மையான சுதந்திரத்துக்கு தேசப்பிரஜைகள் அனைத்தும் ஒன்று பட்டு உழைக்க வேண்டுமென்ற நிலை உருவாக் கப்படவேண்டும்.

வட கிழக்கு தமிழ் மக்களைப் பொறுத்தவரை நாட்டின் சுதந்திர தினத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாடும் நிலை இன்னமும் ஏற்பட வில்லை என்றே அவர்கள் கருதுகிற காரணத்தினாலையே இந்த ஆர்ப்பாட்டங்கள், கரிநாள் அனுஷ்டிப்புக்களும் இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது.காணாமல் ஆக்கப்பட்டோர் அரசியல் கைதிகள் விவகாரம் அரசியல் தீர்வு குற்றச்சாட்டுக்கள் என்பது தொடர்பில் நீதி கிடைக்கவேண்டு மென்பதுதான் அவர்கள் கோரிக்கையாக உள்ளது.

தேசிய மக்கள் அரசாங்கமானது இனப்பிரச்சனைக்கான புதிய அரசியல் அமைப்பினூடாக திர்வு காணப்படு மென்று வாக்குறுதி வழங்கியிருக்கிறது. அதுவரை மாகாணசபை முறை முன்னெடுக்கப்பட மெனவும் கூறியுள்ளது. ஆனால் அரசியல் தீர்வு விவகாரத்தில் முன்னைய காலம் போவே ஒரு இழுபறி நிலையே காணப்படுகிறது என்பது சந்தேகங்களாவுள்ளது. எது எவ்வாறு இருந்தபோதும் ஜனாதிபதி கூறிவருவதுபோல் இன மதம் மொழி வேறு பாடு அற்ற ஒரு தேசிய நாட்டை உருவாக்க எல்லோரும் பாடு படவேண்டு மென்பது மாத்திரமல்ல இந்த நாட்டில் வாழும் அனைத்து சமூகத்தவரும் தேசிய தினத்தை ஒற்றுமையாகவும் ஒன்று பட்டும் உணர்வு மேலிட கொண்டாடும் சூழ்நிலையொன்று உருவாக பாடுபடவேண்டும்.

• • •

## மட்டக்களப்பில் ... தொடர்ச்சி ...

பிரதேசங்களாகும். மாதவணை, புதிய மாதவணை, மயிலத்தமடு, மாந்திரியாற்றுப் பகுதி என்னும் இடங்களிலுள்ள 3,000 ஏக்கர் மேய்ச்சல் தரைக் காணிகளை பொலநறுவை, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு 2014ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் விவசாயச் செய்கைக்கு வழங்குவதற்கு வனவள திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்ததாக அறிய முடிகிறது.

அது பல்வேறு முயற்சிகளால் நிறுத்தப்பட்டாலும், கிழக்கு ஆளுநரால் 2024, கடந்த வருடத்தில் மீண்டும் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டது. மேய்ச்சல் தரை நிலங்களை விவசாயத்துக்கு வழங்கும் திட்டத்தைத் தடுக்கும் வகையில் தமிழ் அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகளின் பின்னர், நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றம் தடுத்தாலும் அதை நடைமுறைப்படுத்த பொலிசாரும் அசமந்த போக்கை கடைப்பிடிக்கின்றனர்.

ஜனாதிபதி ரணிலின் காலத்தில் பண்ணையாளர்கள் தொடர் போராட்டங்களை சித்தாண்டி சந்தியில் முன்எடுத்த நிலையில் ஜனாதிபதி ரணில் செங்கலடி மத்திய கல்லூரிக்கு வருகை தந்து 2023 செப்டம்பர் 08,கொம்மாதுறையில் இடம்பெற்ற கவன ஈர்ப்பு போராட்டத்தின் பின்னர் ஏறாவூர் பொலிசார் பண்ணையாளர்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.ஸ்ரீநேசன், சீ.யோகேஷ்வரன், ஊடகவியலாளர்களான கிருஷ்ண பிள்ளை, சஜீதரன், மற்றும் பொது அமைப்பு பிரதிநிதிகளை சேர்ந்த 32, பேருக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளனர், இதுவரை 15, மாதங்களாக கடந்த 2023, நவம்பர், 17, தொடக்கம் 2025,ஜனவரி,22, வரை 8, தவணை வழக்கு இடம்பெற்றும் முடிவுகள் இல்லை 9, வது தவணை எதிர்வரும் 2025,ஏப்ரல்,22,ல் மீண்டும் உள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்களுக்கு மாடுகள் மேயும் மேய்ச்சல் தரையும் இதுவரை இல்லை, மேய்ச்சல் தரை மீட்புக்காக கவன ஈர்ப்பு நடத்திய 32, பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் முடிவுறவில்லை தொடர்ந்து செல்லும் அவலமாகவே உள்ளது.

• • •

## மீண்டும் ஒரு ... தொடர்ச்சி ...

எழுதினான். இவை தொடர்பான யதார்த்த நிலைகளை அவன் உள்வாங்கிக் கொண்டது வானொலிச் செய்திகள் ஊடாகவும், பத்திரிகைப் பதிவுகள் ஊடாகவும் தான். அன்றைய கால கட்டத்தில் எமக்கான தொடர்பு ஊடகமாக இருந்தது வானொலி மட்டுமே. (தொலைக் காட்சி செயல்பாட்டுக்கு வந்திருக்காத காலம்) ஆங்கி லம், தமிழ் என இரண்டு மொழிச் செய்திகள் அனைத்தையும் தவறாமல் வானொ லியில் கேட்டுக் கொண்டிருப்பான். ஏன் இப்பிடி விழுந்து விழுந்து செய்திகள் எல்லாம் கேக்கி றான்!' என்று இடைக்கிடை நாம் அவனை விமர்சித்ததும் உண்டு. மிகச்சிறந்த படைப்பாளன், சாதனை படைக்கவிருந்த ஊடகவியலாளன் அன்றே உருவாகியிருந்தான் என்பதற்கான ஒரு அடையா ளமே இது என்பதைப் போகப் போக எம்மால் புரிந்து கொள்ள முடிந்தது.



*1987*இல் எமது மண்ணிலே இந்திய அமைதி(?) படை கால் வைத்தது. பாரதியின் ஊடகப் பணிக்கு இடையூறு விளைவிப்பதாய் எதிர் பாராத விபத்தொன்று *1987* ஓகஸ்ட் மாதம் நடந்தது. செய்தி சேகரிப்புக்காக திருகோணமலை நோக்கிப் பேருந்துப் பயணம் மேற்கொண்டிருந்த ஊடகர்களில் ஒருவனாக பாரதியும் சென்று கொண்டிருந்த வேளை, மரமொன்றுடன் பேருந்து மோதிய விபத்தில் இவன் வலது கையில் பலத்த காயம்.

யாழ். மருத்துவ மருத்துவமனைக்கு அனுப் பப்பட்டு பின்னர் சிகிச்சைக்காகத் தமிழகம் கூட்டிச் செல்லப்பட்ட பாரதியுடன், எனது சின் னண்ணாவும் கூடவே சென்றிருந்தார். காயம் பலமானதாக இருந்த காரணத்தினால் , வலது கையை அகற்றிவிட வேண்டிய நிர்ப்பந்த சூழ் நிலை ஏற்பட்டது. அந்த சமயத்தில் பாரதி மிக வும் உறுதியாகவே இருந்திருக்கிறான். சிகிச்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே இடது கையால் எழுதவும், வேறு வேலைகள் செய் யவும் உரிய பயிற்சிகளில் முழுமனதோடு தன்னை ஈடுபடுத்தி வெற்றியும் கண்டிருந்தான். *88* ஜனவரியில், சிகிச்சை முடித்து, வலது பக்கம் செயற்கைக் கையுடன் பாரதி தாயகம் திரும்பி னான். எதுவுமே நடக்காதது போல முன்னை விடப் பலமடங்கு முனைப்புடன் தனது வழ மையான பணி தொடர அவன் துவங்கியது, எல்லோருக்குமான ஆச்சரியம்!

இந்திய ராணுவ வடிவில் பின்னரும் ஒரு சோதனை தொடர்ந்தது. பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது கைது செய்யப்பட்டுக் கூட்டிச் செல்லப்பட்டான். ஏன் நடந்தது? பாரதி எங்கே?.. இன்னும் பல கேள்விகளுடன் வீடே குழம்பிக் கிடக்க முரசொலி ஆசிரியர், குளோபல் அதிபர் சிவராஜா ஆகியோரின் முயற்சியால் மூன்று தினங்களின் பிறகு சுபாஸ் ஹோட்டலில் இருந்த இந்திய இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த பின் அவன் விடுவிக்கப்பட்டான். தொடர்ந்தும் யாழ். இல் பணி தொடர்வதில் இருந்த ஆபத்தை உணர்ந்து, உடனடியாக பாரதி கொழும்புக்கு அனுப்பிவைக் கப்பட்டான். தந்தையாரும் கூடவே சென்று, தெகி வளையிலுள்ள ஒரு உறவினரின் வீட்டில் தங்க வைத்துத் திரும்பினார்.

கொழும்பில், வீரகேசரி - தினக்குரல் எனப் பாரதியின் ஊடகச் செயல்பாடுகள் விஸ்தரிக்கப் பட்டன. ஊடகப் பரப்பில், அவனுடைய பங் களிப்பு அனைவராலும் வரவேற்புப் பெற்றது.

*1991* மார்ச் இரண்டாம் நாள், பாரதியின் ஊடகப்பணிக்கு மிகப் பெரிய சோதனை ஒன்று நேர்ந்தது. பிரேமதாசா ஆட்சியின் போது வெளிநாட்டு அமைச்சராக செயலாற்றிய ரஞ்சன் விஜேரத்னாகொழும்புவீதியொன்றில்படுகொலை செய்யப்பட்ட வேளையில் அண்மித்த பகுதிகளில் பயணித்துக் கொண்டிருந்த பாதசாரிகளில் பாரதியும் ஒருவன். துரதிஸ்டவசமாக, அவனுடைய உதட்டில் குண்டுச் சிதறல் ஒன்று பாய்ந்து காயம் ஏற்படுத்த ரத்தம் ஒடத்துவங்கியது. சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்க, சந்தேக நபர்களில் ஒரு வனென *NIB (National Intelligence Bureau)* அவனைக் கைது செய்து, விசாரணைகளின் பிறகு பத்து நாள்களில் விடுதலை செய்தது. வீட்டுக்கு வந்தவன், உணவருந்த ஆயத்தமாகியபோது, சிஐடி பிரிவினர் *(Criminal Investigation Department)* வீட்டுக்குள் நுழைந்து மீண்டும் பாரதியைக் கைது செய்து கொண்டு போனார்கள். அங்கு, நான்காம் மாடி விசாரணைகள், புலனாய்வுப் பிரிவு விசாரணைகள் எனத் தொடர்ந்த பின், இரண்டு மாத காலத் தடுப்பின் பின்னர் மீண்டும் விடுதலை செய்யப்பட்டான். உதட்டில் பட்ட காயத்தின் வடுவை இன்னமும் பாரதியின் முகத்தில் காணக்கூடியதாக உள்ளது. விழ விழ எழுவோம்.. ஒன்று விழ ஒன்பதாய் எழுவோம்!' என்ற கோட்பாட்டின் நாயகனாய் எங்கள் பிள்ளை பணி தொடர்ந்தான். இவை யாவும் எமக்குத் தெரியக் கூடியதாக நிகழ்ந்த சோதனைகள், யாரை யும் எதற்காவும் புண்படுத்தாத பாரதி என்ற பண்பாளனுடைய மௌனத்துக்குள் இன்னும் எத்தனை சொல்ல முடியாத வேதனைகள் புதைந்து கிடந்தனவோ என்று இன்று என் மனம் எண்ணிப் பரிதவிக்கிறது. *2021* ஜனவரியில் மீண்டும் தான் பிறந்த ஊருக்கே திரும்பிய பாரதியின் பணி அதே முனைப்புடன், அதே தீவிரத்துடன் தொடர்ந்தது. அகிலன், பார்த்திபன், சத்தியன், அபிமன்யு என, வேறு வேறு அவதாரங்கள் எடுத்து பாரதி நிகழ்த்திக் காட்டிய ஊடக சாதனைகள், ஒற்றைக் கையால் கணினியை இயக்கி அவன் சாதித்துக் காட்டிய அற்புதங்கள் என,யாவுமே அவனைச் சார்ந்த எம் அனைவருக்கும் பெருமிதம்.




பாரதி என்ற அதி மனிதன் ஒரு நேர்மையான ஒப்புவமை இல்லா ஒரு ஊடகவியலாளனாக எல்லோரிடத்திலும் அன்பு கொண்டவனாக ...... வாழ்ந்து காட்டியவன் என்பதற்கு அடையாளமாக எங்கள் பிள்ளையின் இறுதி வணக்க நிகழ்வில் இன, மொழி, மத வேற்றுமைகள் யாவும் கடந்து, நூற்றுக் கணக்கான மக்கள் திண்டு நின்று அவனுக்குத் தங்கள் அஞ்சலியைச் செலுத்தினார்கள். ILC வானொலியில் பாரதிக்கான அஞ்சலி நிகழ்வின் போது ஒருவர் அவனை ஒரு ஊடக ஜாம்பவான்' என்று விதந்துரைத்தார். மற்றொருவர் ஒரு 'ஊடகப் போராளி' என்று பாரதியை மேன்மைபடப் புகழ்ந்து கூறினார். அவன் நேசித்த - அவனை நேசித்த - மக்களைப் பெரும் துயரில் ஆழ்த்தி விட்டு பாரதி நீண்டதொரு துயிலில் ஆழ்ந்து கிடக் கிறான்.

உயிர் கரைந்து கண்ணீர் சொரியும் ஊடக உலகம் செய்வதறியாமல் திகைத்து நிற்கிறது. "எமது மக்கள் தாமாகவே எழுந்து, ஒரு தேசமாக எழுந்து வருவார்கள்" என்று, ஒரு மண் பற்றாளனாக அவன் விதைத்துச் சென்ற நம்பிக்கை எம்மை நிமிர வைக்கிறது !

• • •

## உலகத் தாய் ... தொடர்ச்சி ...

இன்றைய காலகட்டத்தில் மேற்குலக நாடுகள் அனைத்து மதங்களுக்கும் மொழிகளுக்கும் இனங்களுக்கும் அவர்தம் கலாசார பண்பாட்டு வாழ்வியல் விழுமியங்களுக்கும் சமமான மதிப்பளித்து அவற்றிற்குரிய அங்கீகாரத்தை வழங்குகின்றன. அத்துடன் தாய்மொழி கற்க வேண்டிய அகத்தியத்தை உணர்த்தி தாய்மொழிக் கல்வியை ஊக்குவித்தும் வருகின்றன. தாய்மொழியினை நன்கறிந்த ஒருவரினால் எந்த மொழியையும் இலகுவாகக் கற்க முடியும் என்னும் கருத்துகளும் தாய்மொழியில் சிந்திக்கும் ஒருவர் சிறந்த அறிவாற்றலும் சிந்தனாசக்தியும் உடையவராக இருக்க இயலும் என்னும் கருத்துகளும் இங்கு நிலவுகின்றன.

இந்த நிலையில் புலம்பெயர் தமிழர் களாகிய நாம் எமது பிள்ளைகளுக்குத் தாய் மொழியினைத் தவறாது புகட்டவேண்டியது அகத்தியமாகிறது. தமிழர் ஒவ்வொருவருடைய வீடுகளிலும் தமிழ் பேசப்பட வேண்டும். உலக அரங்கில் முதன் மொழியாகவும் செம்மொழி யாகவும் விளங்கும் எம் தாய்மொழியின் பழமை, பெருமை, மேன்மை பற்றிப் பெற்றோர் ஒவ் வொருவரும் தமது பிள்ளைகளுக்கு எடுத்துக்கூறித் தமிழ்மொழி கற்க வேண்டியதன் அகத்தியத்தைத் தெளிவுபடுத்தவேண்டும். எந்தஒருமொழியையோ பாடத்தையோ விருப்புடன் கற்கும் பட்சத்தில் அதனை மிகவும் எளிதாகக் கற்கவும் விளங்கிக் கொள்ளவும் முடியும். அந்த வகையில் எமது பிள்ளைகளுக்கு எம் தாய்மொழியாம் தமிழ்மொழி மீது விருப்பமும் பற்றும் மதிப்பும் உண்டாகக் கூடிய வகையில் பெற்றோரும் பெரியோரும் ஆசிரியர்களும் சொல்லிக்கொடுத்து வளர்க்க வேண்டியது அகத்தியமாகிறது. புலம்பெயர் தேசங்களில் தமிழ்ப் பாடசாலைகளில் தமிழ் மொழியும் கலைப்பாடங்களும் கற்பிக்கப்படு கின்றன. இங்கு தமிழ்ப் பாடசாலைகள் ஆற்றும் தமிழ்ப் பணியானது மிகவும் போற்றுதற்குரியது. இவற்றுடன் கூடவே மேற்குலக நாடுகள் தாய்மொழிக் கல்விக்குக் கொடுக்கும் ஊக்குவிப் பினை ஆதாரமாகக் கொண்டு அந்தந்த நாடுகளின் அரச பள்ளிகள், அரசுகளின் செயற்திட்டங்களின் ஊடாகத் தமிழ்மொழிக் கல்விக்கான வாய்ப்புகளை அமைத்துக்கொள்வது சிறப்புடையதாகும்.

இதனடிப்படையில் இந்த நாடுகளில் தமிழ்ப்பணி புரிந்துவரும் நலன்புரி நிறுவனங் களும் தமிழ் அமைப்புகளும் தம்மாலான முயற்சி களை மேற்கொண்டு இளைய சமுதாயத் தின் தமிழ்மொழிக் கல்வி அபிவிருத்திக்கான திட்டங்களை முன்னெடுத்துப் பலன்பெறுவார் களேயானால் இங்கு தமிழ்மொழி வளம்பெறும் என்பதும் நிலைபெறும் என்பதும் உறுதி.

• • •

## தொடரும் வேலை ... தொடர்ச்சி ...

போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

எதிர்வரும் வரவு செலவு திட்டத்தில் அனைத்து வேலையற்ற பட்டதாரிகளுக்கும் பரீட்சைகள் இல்லாமல் பொதுவான நியமனத்தை அரசாங்கம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரதானமாக வலியுறுத்தி திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களை சேர்ந்த பட்டதாரி கள் கவனயீர்ப்பினை முன்னெடுத்தனர்.

இதன்போது "வரவு செலவு திட்டத்தில் 35000 வேலைவாய்ப்பினையும் பட்டதாரிகளுக்கே வழங்குவதாக உறுதி செய்", "ஓய்வுபெறும் முதியோரை பணியமர்த்தும் அரசே ஒய்வில்லாது போராடும் எம்மை ஓடவிடாதே", "படித்து பட்டம் பெற்றும் பதவி இல்லை", "வேலை இல்லை என்றால் பல்கலைக்கழகம் எதற்கு?", "வேண்டாம் வேண்டாம் போட்டி பரீட்சைகள் வேண்டாம்" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியும், கோசங்களை எழுப்பியவாறும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பெண் பட்டதாரி ஒருவர், 2019ஆம் ஆண்டில் இருந்து இதுவரை எந்தவொரு அரச நியமனங்களும் முறையான வகையில் பட்டதாரிகளுக்கு வழங்கப்படவில்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் வேலையற்ற பட்டதாரிகளுக்கு தீர்வு வழங்குவதாக தெரிவித்திருந்தார்கள். எனினும் இதுவரை எமது பிரச்சினை தொடர்பாக பேசப்படவில்லை. எனவே எதிர்வரும் பெப்ரவரி 17 பாதீட்டில் பட்டதாரிகளை ஏதோ ஒரு வகையில் அரசு உள்வாங்க வேண்டும்.

இது தனிப்பட்ட பட்டதாரிகளினுடைய பிரச்சினையோ அல்லது பட்டதாரிகளினுடைய குடும்பம் சார்ந்த பிரச்சினையோ இல்லை. இது ஒரு சமூகப் பிரச்சினையாகும். கிழக்கு மாகாணத்தில் 6000 வெற்றிடங்கள் உள்ளன. அதேபோன்று 6000 பட்டதாரிகள் இருக்கின்றார்கள். அதில் ஆசிரியர் வெற்றிடங்கள் 3000 உள்ளன. எனவே பிள்ளைகளினுடைய எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றோம். குறிப்பாக ஒரு பாடசாலையில் விஞ்ஞானம் படிப்பிக்கின்ற ஆசிரியர் கணிதம் படிப்பிக்கின்றார். அதேபோன்று தமிழ் படிப்பிக்கின்ற ஆசிரியர் வரலாறு படிப்பிக்கின்றார். இந்நிலையில் அந்த மாணவர்களுக்கு முறையான வகையில் கல்வி வழங்கப்படவில்லை" என்றார்.

வேலையில்லாமல் ஆண் பெண் பட்டதாரிகள் குடும்பத்தில் சுமையாக இருப்பதை இந்த அரச துறை நியமனங்கள் உணர்த்தி நிற்கிறது. இதனால் மன நிலையில் விரக்தி ஏற்பட்டு உளரீதியான பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். பொருளாதார கஷ்டத்துடன் திருமணங்களை முடித்து தொழிலின்றி பட்டங்கள் பெற்றிருந்தாலும் கவலையுடன் பட்டதாரிகள் நிலை செல்கின்றது. இது

குறித்துவடகிழக்கு பட்டதாரிகள் ஒன்றியத்தின் உறுப்பினர் எம். ஐ. எம் புர்க்கான் தெரிவிக்கையில், "அரசாங்கத்தின் அசமந்த போக்கு காரணமாக வேலையற்ற பட்டதாரிகள் பல துன்பங்களை அனுபவித்து வாழ்ந்து வருகிறார்கள். பெரும் பொருளாதார பிரச்சினை என பல சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றார்கள். உள்வாரி வெளிவாரி பட்டங்களை சுமார் 4, 5 வருட கற்கை களை சிறப்பு பொது பட்டம் என கற்று பூரணமாக்கியதன் பின்பும் தீர்வில்லாமல் தவிக்கிறோம்.

எங்களை போன்ற இளைஞர் யுவதிகளின் குறிப்பாக வேலையற்ற பட்டதாரிகளின் வாக்குகளை வைத்து ஆட்சியை பிடித்த அரசாங்கம், எதிர்வரும் வரவு செலவு திட்டம் ஊடாக தீர்வை வழங்க வேண்டும். ஆசிரியர்களுக்காக 30 ஆயிரம் வெற்றிடங்கள் கிராம சேவகர்களுக்காக 3000 க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் இருப்பதாகவும் கூறுகின்றனர்.

இதனை பட்டதாரிகளுக்கு பரீட்சை இன்றி பொது நியமனங்கள் ஊடாக அரச துறையில் நியமனங்களை வழங்க வேண்டும். பல வேறு பொருளாதார கஷ்டங்களுடன் திருமணம் முடித்த நிலையில் வாழும் எங்களை நிராகரிக்காது கற்ற கல்விக்கான பட்டத்துக்கு தீர்வை தாருங்கள்.

போட்டி பரீட்சை என்ற பேரில் பரீட்சைக்கு முகங்கொடுக்க முடியாத கேள்விகளை எடுத்து தோல்வியை சந்திக்கின்ற நிலை ஏற்படுகின்றது. தற்போது கற்கும் உயர்தரம் தொடக்கம் பல் கலைக்கழக மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படுகிறது. 2021ம் ஆண்டு முதல் உள்வாரி வெளிவாரி பட்டங்களுடன் பலர் பட்டதாரிகளாக தொழில் இன்றி அலைகின்றனர். இதனை கருத்தில் கொண்டு புதிய அரசாங்கத்தின் கீழ் பொதுவான நியமனங்களை எங்களுக்கு வழங்க ஆளுநர்கள், துறைசார் அமைச்சுக்கள் புதிய ஜனாதிபதி போன்றோர்கள் மிக கரிசனையுடன் செயற்படுங்கள் என்றார்.

கடந்த பாராளுமன்ற தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தியின் மூதூர் தொகுதியை பிரதிநிதித்துவம் செய்து போட்டியிட்ட வேட்பாளர்கள் பட்ட தாரிகள் ஒன்றியத்தினரை சந்தித்து தகவல்களை பெற்றிருந்தனர். இவர்களின் வாக்குகளை வைத்து மூதூரில் உள்ள வேட்பாளர் சுமார் 17000 வாக்குகளையும் கிண்ணியாவில் உள்ள வேட்பாளர் சுமார் 18000 வாக்குகளையும் பெற்றிருந்த நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் இவர்களது கட்சி சார்பில் இருவர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகினர். அதில் ஒருவர் அருண் கேமச்சந்திர பிரதியமைச்சராகவும் இன்னொருவரான ரொசான் அக்மீமன பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரி வாகினர். ஆனாலும் பட்டதாரிகளின் விடயத்தில் எவ்வித முன்னெடுப்புக்களும் எடுக்கவில்லை.

அரசாங்க துறை வேலை வாய்ப்பிற்காக காத்திருக்கும் இது போன்ற பட்டதாரிகள் எதிர் காலத்தில் தங்களுடைய வாழ்வாதாரத்தை இழக்க நேரிடுகிறது. எனவே இவர்களது நியாயமான கோரிக்கைகளை ஏற்று அரசாங்க துறையில் நியமனங்களை இடது சாரி கொள்கை கொண்ட தற்போதைய ஆட்சியில் உள்ள அரசாங்கம் வழங்க முன்வர வேண்டும்.

• • •

## உக்ரைன் போரு ... தொடர்ச்சி ...

உக்ரைன் விவகாரம், மத்தியகிழக்கு விவகாரம், செயற்கை நுண்ணறிவு, டொலர் விவகாரம், எரிசக்தி உட் பட பல விடயங்களைத் தான் புட்டினுடன் பேசியதாகவும், இரு தலைவர்களும் அமெரிக்காவுக்கும், ரஸ்யாவுக்கும் பயணம் செய்வது தொடர்பாகவும், உடனடியாக போரை நிறுத்து வது தொடர்பாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் ட்ரம்ப் நேரிடையாக புட்டினுடன் தொடர்பு கொண்டது ஐரோப்பிய நாடுகளிடம் பலத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஐரோப்பாவை உள்ளடக்காது உக்ரைன் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என ஈஸ்ரேனியாவின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உக்ரைனை விட்டுவிட்டு பிரச்சினை தொடர்பில் ரஸ்யாவும்-அமெரிக்காவும் பேசப் போகின்றன என்ற அச்சங்கள் எழுந்துள்ள நிலையில் உக்ரைன் இல்லாத பேச்சுக்களை தான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என உக்ரைன் அதிபர் தெரிவித்துள்ளார். அதேசமயம், உக்ரைனே இந்த பேச்சுக்களில் முக்கிய பங்குதாரராக இருக்க வேண்டும் என பிரித்தானியாவின் பிரதமர் கியர் ஸ்ராமர் தெரிவித்துள்ளார்.

## சிறிலங்கா பொது ... தொடர்ச்சி ...

படுத்துவதற்கு SLPP இன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியதாகவும் தெரிவித்தார்.

மேலும், அமெரிக்க வரி செலுத்துவோர் வளங் களை ஒதுக்கீடு செய்வதில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதை மையமாகக் கொண்டு, இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத அரச சார்பற்ற நிறுவனங்கள் USAID நிதியைப் பயன் படுத்துவதை விசாரிக்கும் நாடாளு மன்றத் தெரிவுக்குழுவின் SLPPயின் முன்மொழிவு குறித்து தூதுவர் சுங்கிற்கு அவர்கள் விளக்கினர்.

இரு நாடுகளின் பரஸ்பர நலனுக்காக புதிய அமெரிக்க நிர்வாகத்துடன் நெருக்கமாக ஒத்துழைக்க SLPP எதிர்நோக்குகிறது என்றும் நாமல் ராஜபக்ஷ கூறினார்.

## யுஎஸ்எயிட் ... தொடர்ச்சி ...

கேள்விக்குறியாக மாறியிருக்கிறது.

மாலாவி நாட்டின் பொருண்மியத்தின் முதுகெலும்பாக விளங்குகின்ற விவசாய சமூகங்களைப் பொறுத்தவரையில், சிறிய விவசாயிகளுக்கு விருத்திசெய்யப்பட்ட விதைகள் வழங்குதல், நீர்ப்பாசனத் திட்டங்கள், காலநிலை மாற்றங்களால் பாதிக்கப்படுவோருக்கான திட்டங் கள் போன்ற விவசாயிகளுக்கான திட்டங்களை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம் என்றும் இதன் காரணமாக அந்த நாட்டில் உணவுப் பாதுகாப்பு மோசமான நிலையை அடையலாம் என்றும் நிசான்யா சிவில் சமூக அமைப்பின் தலைவரான மைக் டான்சா தெரிவித்தார்.

ஜொஹன்னஸ்பேர்க்கில் (Johannesburg), பெப்பார் (Pepfar) என அழைக்கப்படும் அமெரிக்க எச்ஐவி மற்றும் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான திட்டத்திலிருந்து நிதியைப் பெற்றுவந்த திட்டங்கள் பல தமது நிறுவனங்களை மூட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டுள்ளன.

ஜொஹன்னஸ்பேர்க்கில் உள்ள எல்ஜிபிரிகியூவை (LGBTQ) சேர்ந்த கிட்டத்தட்ட 6000 பேருக்கு மருத்துவசேவையை வழங்கிவந்த நிறுவனம், தனது சேவையை இடைநிறுத்தியுள்ளதாக அதன் பணிப்பாளர் டேவி நெல் சுட்டிக்காட்டினார். "அமெரிக்காவை இனிமேல் நம்ப முடியாது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அத்திலாந்திக் சமுத்திரத்துக்கு அப்பால் பல குழப்பமான செய்திகளை அறியக்கூடியதாக விருந்தது. அறுபது ஆண்டுகளாக உள்நாட்டுப் போரினாலும், போதைப் பொருள் தொடர்பான வன்முறைகளாலும் பாதிக்கப்பட்டிருந்த கொலம்பியா நாட்டின் நிறுவனங்கள் பல அமெரிக்க நிதியுதவியிலேயே தங்கியிருந்தன.

ஆயுதக் குழுக்களுக்கிடையேயான மோதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த அவசர உதவிகள் மற்றும், கொக்கா தாவரத்தைப் பயிரிடுவதைக் கைவிட்டு வேறு சட்டரீதியிலான தாவரங்களைப் பயிரிடுவோருக்கான உதவிகள் எல்லாமே தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்க பன்னாட்டு அபிவிருத்திக்கான உதவித்திட்டத்தின் ஆதரவுடன் எமது நாடு முழுவதுமே பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்த திட்டங்களை திடீரென நிறுத்தினால் பாரிய மனிதாய ஆபத்துகள் ஏற்படும் சூழல் இருக்கிறது என்று கொலம்பியாவின் மேனாள் அதிபரும், அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றவருமான ஹ_வான் மனுவேல் சாந்தோஸ் (Juan Manuel Santos) கருத்துத் தெரிவித்தார்.

**நன்றி: *theguardian.com***

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# மூத்த ஊடகவியலாளர் பாரதி அவர்களின் இறுதிப் பயணத்தின் போது...















